பரிபூரண ஜீவன்

PARIPOORANA JEEVAN

தேவன் அருளிய

சொல்லிமுடியாத ஈவுக்காக

அவருக்கு ஸ்தோத்திரம்.

2 கொரிந்தியர் 9:15

Thanks be to God for his indescribable gift!

2 CORINTHIANS 9:15

THE THAMIZH PRADHESA ASSEMBLIES OF GOD

November - December 2026 | ஆண்டு சந்தா ₹120/-

Volume : 66 | Issue : 6

17வது ஆண்கள ஐக்கிய மாநில முகாம்–2026

















AGNM Coordinators' Meeting, Oct 12,13-2026
Hope AG Church, Chennai and Elim AG Church, Madurai





ஆசிரியரிடமிருந்து.....!



அர்த்தமுள்ள கிறிஸ்துமஸ்

கிறிஸ்துமஸ் நெருங்கும்போது உலகமே ஒரு புதிய உற்சாகத்தைப் பெறுகிறது. வீடுகளில் நட்சத்திரங்கள் ஒளிர்கின்றன; வண்ண விளக்குகள் அலங்கரிக்கின்றன; கிறிஸ்துமஸ் பாடல்கள் ஒலிக்கின்றன; புதிய ஆடைகள் வாங்கப்படுகின்றன; கேக்குகள் தயாரிக்கப்படுகின்றன; பரிசுகள் பரிமாறப்படுகின்றன. சபைகளில் சிறப்பு ஆராதனைகள் நடைபெறுகின்றன. குடும்பங்கள் ஒன்றுகூடி மகிழ்கின்றன. குழந்தைகளின் முகங்களில் எதிர்பார்ப்பும் மகிழ்ச்சியும் தெரிகிறது. இவை அனைத்தும் கிறிஸ்துமஸின் அழகான அம்சங்கள்தான். ஆனால் கிறிஸ்துமஸின் உண்மையான அர்த்தம் இந்த வெளிப்புறக் கொண்டாட்டங்களைக் காட்டிலும் மிகவும் ஆழமானது.

கிறிஸ்துமஸ் என்பது ஒரு குழந்தையின் பிறந்தநாளைக் கொண்டாடும் நிகழ்வு அல்ல. தேவனுடைய குமாரன் மனித உருவெடுத்து இந்த உலகத்திற்கு வந்த அற்புதமான இரட்சிப்பின் வரலாற்றை நினைவுகூரும் நாள். பாவத்தில் சிக்கியிருந்த மனிதகுலத்தை மீட்பதற்காக இயேசு கிறிஸ்து பிறந்தார். தேவதூதன் மேய்ப்பர்களிடம், "இதோ, எல்லா ஜனத்துக்கும் உண்டாகப்போகிற மிகுந்த சந்தோஷத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்" என்றான் (லூக்கா 2:10). அந்த மகிழ்ச்சியான செய்தி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பெத்லகேமில் மட்டும் ஒலித்த செய்தியல்ல; இன்றும் ஒவ்வொரு மனிதனுக்கும் தேவன் அளிக்கும் நற்செய்தியாக அது ஒலித்துக்கொண்டிருக்கிறது.

ஆகவே இந்த ஆண்டு கிறிஸ்துமஸைக் கொண்டாடும்போது, "எவ்வளவு சிறப்பாகக் கொண்டாடலாம்?" என்று மட்டும் சிந்திக்காமல், எவ்வாறு அர்த்தமுள்ளதாகக் கொண்டாடலாம்? என்றும் சிந்திப்போம். கிறிஸ்துமஸ் நம் வீடுகளில் மட்டும் நிகழாமல், நம் இருதயங்களிலும், உறவுகளிலும், செயல்களிலும் வெளிப்படட்டும்.

துதி, நன்றி, மகிழ்ச்சியோடு கொண்டாடுங்கள்
REJOICE WITH THANKSGIVING

மேய்ப்பர்கள் பெத்லகேமுக்குச் சென்று இயேசுவைக் கண்டபோது, அவர்கள் தேவனை மகிமைப்படுத்தியும் துதித்தும் திரும்பிச் சென்றார்கள். லூக்கா 2:20 கூறுகிறது: "**தேவனை மகிமைப்படுத்தி, துதித்துக் கொண்டே திரும்பிப்போனார்கள்.**" கிறிஸ்துமஸ் நமக்கும் இதே அழைப்பைத் தருகிறது. கடந்த ஆண்டைத் திரும்பிப் பார்க்கும்போது, நாம் சந்தித்த சவால்களை மட்டும் எண்ணாமல், அவற்றின் நடுவில் நம்மைத் தாங்கிய தேவனுடைய கிருபையையும் நினைவுகூர வேண்டும். நமக்கு எல்லாம் கிடைத்திருக்காமல் இருக்கலாம்; ஆனால் தேவன் நம்மை ஒருபோதும் கைவிடவில்லை. சில ஜெபங்களுக்கு உடனடியாக பதில் கிடைக்காமல் இருந்திருக்கலாம்; ஆனால் தேவனுடைய

உண்மைத்தன்மை மாறவில்லை. சில கதவுகள் மூடப்பட்டிருக்கலாம்; ஆனால் தேவன் நம்மை வழிநடத்துவதை நிறுத்தவில்லை.

நம்மிடம் இல்லாதவற்றைப் பற்றி சிந்தித்துக் கொண்டிராமல் தேவன் நமக்கு தந்தவைகளை நினைத்து, நம்மிடம் இருப்பவற்றுக்காக நன்றி செலுத்த கற்றுக்கொள்வதே விசுவாசத்தின் அடையாளம். நமக்கு உயிரைக் கொடுத்ததற்காகவும், இரட்சிப்பைக் கொடுத்ததற்காகவும், குடும்பத்தைத் தந்ததற்காகவும், சபையைக் கொடுத்ததற்காகவும், தேவனுடைய வார்த்தையை நமக்குக் கொடுத்ததற்காகவும் நாம் நன்றி செலுத்த வேண்டும். இவை எல்லாவற்றையும் விட பெரிய பரிசு ஒன்று இருக்கிறது தேவன் தம்முடைய குமாரனையே நமக்காகக் கொடுத்தார்! விலையேறப் பெற்ற இரட்சிப்பை கொடுத்தார்!. ஆகவே, **"தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்"** என்று சொல்லுங்கள் (2 கொரி. 9:15).

யோவான் 3:16-ல், "தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" என்று வாசிக்கிறோம். எனவே கிறிஸ்துமஸ் நம் இருதயங்களில் நன்றி உணர்வை கொண்டு வர வேண்டும். இந்த கிறிஸ்துமஸில் நாம் குடும்பமாகக் கூடி, கடந்த ஆண்டில் தேவன் செய்த நன்மைகளை நினைத்து அவரைத் துதிப்போம். நம் வீடுகளில் கிறிஸ்துமஸ் பாடல்கள் ஒலிக்கட்டும்; ஆனால் அதைவிட முக்கியமாக நம் இருதயங்களில் துதியின் சத்தம் எழும்பட்டும். வெளியில் விளக்குகள் எரியட்டும்; அதைவிட முக்கியமாக நம் உள்ளத்தில் நன்றியின் வெளிச்சம் பிரகாசிக்கட்டும். நன்றியுள்ள இருதயமே அர்த்தமுள்ள கிறிஸ்துமஸின் முதல் அடையாளம்.

பாவங்களை விட்டு மனந்திரும்புங்கள்
REPENT OF YOUR SINS

இயேசு இந்த உலகத்திற்கு ஏன் வந்தார் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. யோசேப்பிடம் தேவதூதன், **"அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்"** என்று கூறினான் (மத்தேயு 1:21). கிறிஸ்துமஸின் மையத்தில் இருப்பது பாவத்திலிருந்து இரட்சிப்பு. இயேசு நம்முடைய இரட்சகராக வந்தார். அதனால் கிறிஸ்துமஸ் நம்முடைய உள்ளத்தை ஆராய வேண்டிய காலமாகவும் இருக்கிறது.

கிறிஸ்துமஸ் வருவதற்கு முன்பாக வீட்டைச் சுத்தம் செய்கிறோம். வீட்டை அழகுபடுத்துகிறோம். ஆனால் இந்த கிறிஸ்துமஸில் நம் இருதயத்தையும் சுத்தப்படுத்த வேண்டும். என் வாழ்க்கையில் தேவனுக்குப் பிரியமில்லாத ஏதாவது இருக்கிறதா? நான் இன்னும் பிடித்துக்கொண்டிருக்கும் பாவம் ஏதாவது இருக்கிறதா? யாரையாவது மன்னிக்காமல் இருக்கிறேனா? தேவனுக்குக் கீழ்ப்படியாமல் இருக்கும் பகுதி ஏதாவது இருக்கிறதா? ஜெப வாழ்க்கையில் நான் பின்வாங்கிவிட்டேனா? தேவனுக்குக் கொடுக்க வேண்டிய முதலிடத்தை வேறு ஏதாவது எடுத்துக்கொண்டுவிட்டதா?

இத்தகைய கேள்விகளை நம்மிடம் நாம் கேட்டுக்கொள்ள வேண்டும். தாவீது, "தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும்" என்று ஜெபித்தான் (சங்கீதம் 139:23). எனவே இந்த கிறிஸ்துமஸ் நாட்களில் வீட்டை அலங்கரிப்பதற்கு முன்பாக இருதயத்தை அலங்கரிப்போம். மற்றவர்களுக்கு பரிசு கொடுப்பதற்கு முன்பாக தேவனுக்கு நம் வாழ்க்கையை அர்ப்பணிப்போம். வெளிப்புறக் கொண்டாட்டத்திற்கு முன்பாக உள்ளார்ந்த மாற்றத்தை நாடுவோம்.

உடைந்த உறவுகளைச் சீர்செய்யுங்கள்
RESTORE BROKEN RELATIONSHIPS

நம் இருதயம் தேவனோடு சரியாகும்போது, அது நம்முடைய மனித உறவுகளிலும் வெளிப்பட வேண்டும். கிறிஸ்துமஸ் என்பது உறவுகளை மீட்டெடுக்கும் ஒரு அழகான வாய்ப்பு. இயேசுவின் பிறப்பை அறிவித்த தேவதூதர்கள், **"உன்னதத்தில் தேவனுக்கு மகிமையும், பூமியில் சமாதானமும் உண்டாவதாக"** என்று பாடினார்கள் (லூக்கா 2:14).

இன்று பல குடும்பங்களின் வெளிப்புற வாழ்க்கை அழகாகத் தோன்றினாலும், உள்ளுக்குள் உடைந்த உறவுகள் இருக்கின்றன. கணவன், மனைவிக்குள் பேசப்படாத காயங்கள் இருக்கலாம். பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையே தூரம் இருக்கலாம். சகோதரர்களுக்குள் சொத்து அல்லது பணப் பிரச்சனையால் மனக்கசப்பு இருக்கலாம். நண்பர்களுக்குள் தவறான புரிதல் இருக்கலாம். சபையில் கூட கருத்து வேறுபாடுகள் உறவுகளைப் பாதித்திருக்கலாம். சமாதானப் பிரபுவாகிய இயேசு கிறிஸ்துவின் பிறப்பு நம்மை சமாதானத்தை உருவாக்க அழைக்கிறது.

''கூடுமானால் உங்களாலானமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்'' என்று வேதம் கூறுகிறது (ரோமர் 12:18). இந்த கிறிஸ்துமஸில் ஒரு உறவை மீட்டெடுக்க நாம் முதல் படியை எடுக்கலாம். பல ஆண்டுகளாக பேசாத ஒருவரைத் தொடர்புகொள்ளலாம். நம்மால் காயப்படுத்தப்பட்ட ஒருவரிடம் மன்னிப்பு கேட்கலாம். நம்மைக் காயப்படுத்திய ஒருவரை மன்னிக்கலாம்.

நம் வீடுகளில் கிறிஸ்துமஸ் விளக்குகள் மட்டும் எரியாமல், மன்னிப்பின் வெளிச்சமும் சமாதானத்தின் ஒளியும் பிரகாசிக்கட்டும். விலையுயர்ந்த பரிசுகளைவிட, உடைந்த உறவை மீட்டெடுப்பது பெரிய கிறிஸ்துமஸ் பரிசாக இருக்கலாம்.

ஏழைகளையும் தேவையுள்ளவர்களையும் நினைவுகூறுங்கள்
REMEMBER THE POOR

கிறிஸ்துமஸ் என்பது கொடுப்பதற்கான காலம். தேவன் தம்முடைய குமாரனையே நமக்காகக் கொடுத்தார். எனவே நாமும் நமக்குள்ளதை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும்.

இயேசு அரண்மனையில் பிறக்கவில்லை; ஒரு தொழுவத்தில் பிறந்தார். இது தேவனுடைய இருதயத்தில் தாழ்மைக்கும் தேவையுள்ளவர்களுக்கும் இருக்கும் இடத்தை நமக்குக் காட்டுகிறது. நம்மைச் சுற்றிலும் இன்று உதவி தேவைப்படும் பலர் இருக்கிறார்கள். உணவுக்காகப் போராடும் குடும்பங்கள், மருத்துவச் செலவுகளைச் சமாளிக்க முடியாதவர்கள், தனிமையில் வாழும் முதியவர்கள், பெற்றோரை இழந்த குழந்தைகள், வேலை இல்லாமல் தவிக்கும் குடும்பங்கள் இவர்களை இந்த கிறிஸ்துமஸில் நினைவுகூர்வோம். **"தரித்திரரை நினைத்துக் கொள்ளுங்கள்"** என்று வேதம் கூறுகிறது (கலா. 2:10).

நம் கொண்டாட்டச் செலவுகளில் ஒரு பகுதியை தேவையுள்ளவர்களுக்காக ஒதுக்கலாம். ஒரு குடும்பத்திற்கு உணவு வழங்கலாம். ஒரு குழந்தைக்கு ஆடை அல்லது கல்வி உதவி செய்யலாம். ஒரு முதியவரைச் சந்தித்து அன்பு காட்டலாம். ஒரு நோயாளிக்கு உதவலாம். கிறிஸ்துமஸ் நமக்கு ஒரு முக்கியமான உண்மையை கற்றுக்கொடுக்கிறது: தேவன் நமக்கு கொடுத்த ஆசீர்வாதங்கள் நம்மிடம் மட்டும் தங்குவதற்காக அல்ல; மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக மாறுவதற்காகவும் கொடுக்கப்பட்டவை. கிறிஸ்துமஸின் மகிழ்ச்சி பெறுவதில் மட்டுமல்ல; கொடுப்பதிலும் இருக்கிறது!

இரட்சிக்கப்படாதவர்களுக்கு நற்செய்தியை அறியுங்கள்
REACH OUT TO THE LOST

கிறிஸ்துமஸின் இறுதி மற்றும் மிக முக்கியமான அழைப்பு நற்செய்தியைப் பகிர்வதாகும். இயேசு இந்த உலகத்திற்கு இரட்சகராக வந்தார். அந்த நற்செய்தி நமக்காக மட்டும் அல்ல; எல்லா மக்களுக்குமானது (லூக்கா 2:10).

மேய்ப்பர்கள் தேவதூதர்களிடமிருந்து செய்தியைக் கேட்டபோது, அதை தங்களுக்குள் வைத்துக்கொள்ளவில்லை. அவர்கள் சென்று தாங்கள் கேட்டதையும் கண்டதையும் அறிவித்தார்கள் (லூக்கா 2:17). அதுபோல கிறிஸ்துவை உண்மையாக அறிந்த, அனுபவித்த நாம், அந்த நற்செய்தியை மற்றவர்களோடு பகிர வேண்டும்.

நம்முடைய குடும்பத்தில் இன்னும் இயேசுவை அறியாத ஒருவர் இருக்கலாம். நம்முடைய நண்பர்களில் ஒருவர் இரட்சிப்பைப் பெறாமல் இருக்கலாம். நம்முடன் பணிபுரிபவர்களில் ஒருவர் தேவனை அறியாமல் வாழ்ந்து கொண்டிருக்கலாம். நம் அண்டை வீட்டில் நம்பிக்கையின்றி வாழும் ஒருவர் இருக்கலாம். இந்த கிறிஸ்துமஸில் அவர்களை நினைவுகூர்ந்து ஜெபிப்போம். அவர்களை ஒரு கிறிஸ்துமஸ் ஆராதனைக்கு அழைப்போம். நம்முடைய சாட்சியை அவர்களிடம் பகிர்வோம். ஒரு சிறிய பரிசின் மூலம் அன்பைக் காட்டுவோம். அவர்களுடன் நேரம் செலவிடுவோம். ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக, இயேசு கிறிஸ்துவே அவர்களுடைய நம்பிக்கையும் இரட்சிப்புமாக இருக்கிறார் என்பதை அவர்களுக்கு அறிவிப்போம்.

இயேசு, **''நீங்கள் உலகமெங்கும் போய், சகல சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்''** என்று கட்டளையிட்டார் (மாற்கு 16:15). கிறிஸ்துமஸ் நம்மை சபைக்குள் மட்டும் மகிழ்ச்சியுடன் கூடுவதற்கு அழைப்பதில்லை; சபைக்கு வெளியே சென்று நற்செய்தியைப் பகிரவும் அழைக்கிறது.

ஒரு மனிதன் கிறிஸ்துவை அறிந்துகொள்வதற்கான ஒரு பாலமாக நாம் இந்த கிறிஸ்துமஸ் நாட்களில் இருக்கலாம். நம்முடைய ஒரு அழைப்பு, ஒரு அழைப்பு செய்தி, ஒரு ஜெபம், ஒரு அன்பான வார்த்தை அல்லது ஒரு சாட்சிப் பகிர்வு ஒருவருடைய நித்திய வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடும்.

அர்த்தமுள்ள கிறிஸ்துமஸ் - MEANINGFUL CHRISTMAS

இந்த கிறிஸ்துமஸில் நாம் நட்சத்திரம் வைக்கலாம், பாடல்கள் பாடலாம், கேக் வெட்டலாம், புதிய ஆடைகள் அணியலாம், பரிசுகளைப் பரிமாறலாம், குடும்பமாக மகிழலாம். ஆனால் அதோடு நின்றுவிடாமல், கிறிஸ்துமஸின் உண்மையான அர்த்தத்தை நம் வாழ்க்கையில் வெளிப்படுத்துவோம். அப்போது நமது கிறிஸ்துமஸ் ஒரு நாள் கொண்டாட்டமாக மட்டும் இருக்காது; அது கிறிஸ்துவை வெளிப்படுத்தும் ஒரு சாட்சியாக மாறும். இந்த கிறிஸ்துமஸ் வெறும் கொண்டாட்டமாக இல்லாமல், ஒரு மாற்றமாக இருக்கட்டும்.

கிறிஸ்துவை மகிமைப்படுத்துவோம்! அவருடைய அன்பைப் பகிர்வோம். அவருடைய நற்செய்தியை அறிவிப்போம்.

"உன்னதத்தில் தேவனுக்கு மகிமையும், பூமியில் சமாதானமும்,
மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக" (லூக்கா 2:14).

Rev. Dr. ஜெரி டேனியல்
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மண்டல தலைமைப் போதகர், திருச்சி மத்திய மண்டலம்.



வீட்டுக்கு வீடு வாசற்படி

Rev. J. ஸ்டேன்லி மாணிக்கராஜ்
Senior Pastor, Assembly of God Church, Vellore
Secretary - The Thamizh Pradhesa Assemblies of God

"அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்; இவ்விதமாய் அவர்கள் இருவராயிராமல் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள். ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் என்றார்" (மாற்கு 10:8,9).

பிரச்சனைகள் இல்லாத குடும்பங்கள் இல்லை; அப்படி இருந்தால் அது குடும்பமே இல்லை என ஒருவர் கூறியது, எவ்வளவு உண்மை என நாம் எல்லாருமே அறிந்திருக்கிறோம். பிரச்சனைகள் பல விதங்களில் ஊடுருவி, குடும்பத்தில் உள்ள தனிப்பட்ட நபர்களை உணர்ச்சி ரீதியாக பாதித்து, குடும்ப அமைப்புகளை சிதைப்பதை நாம் பார்க்கிறோம். பிரச்சனைகளை விட அதை கையாளும் விதம் தான் அநேக நேரங்களில் பெரிய பிரச்சனைகளை உருவாக்கி விடுகிறது. சொல்லப்போனால் சரியாக கையாளப்படும் பிரச்சனைகள் உறவுகளை வலுப்படுத்தி குடும்பத்தில் நெருக்கங்களை அதிகரிக்க வாய்ப்பிருக்கிறது.

மாற்கு 10:8-ல் எழுதியிருக்கிறபடி இவ்விதமாய் அவர்கள் இருவராயிராமல் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள் என்கிற தெய்வீக அமைப்பை சிதைப்பது பிசாசின் அதிமுக்கிய குறிக்கோள். பிரச்சனைகள் எந்தெந்த பகுதிகளில் வருகிறது என்பதைக் குறித்த ஒரு கட்டுரை இந்த இதழில் இடம்பெற்றிருக்கிறது. இந்தப் பகுதியில் ஏன் பிரச்சனைகள் வருகிறது என்பதையும், அதற்கான சில நடைமுறை தீர்வுகளையும் பார்க்கலாம்.

1. அடிப்படை ஆளத்துவ வேறுபாடுகள் (Basic Personality Differences)

ஆளத்துவ வேறுபாடுகளை குறித்து கிட்டத்தட்ட எல்லா இதழ்களிலும், எல்லா தலைப்புகளிலும் குறிப்பிட வேண்டியதாகிவிடுகிறது. ஒரு ஆணும் பெண்ணும் சரீர அமைப்பில் மட்டுமல்ல, உணர்ச்சிகளில், சிந்தனைகளில், கவனிப்பதில், உணர்ந்து கொள்வதில், புரிதலில் என வாழ்க்கையின் எல்லா பகுதிகளிலும் வேறுபட்டவர்கள் என்கிற அடிப்படை உண்மையை நாம் விளங்கி கொள்ள வேண்டும்.

ஆண்டவர் ரோபோட்டுகளை உண்டாக்கவில்லை, மனிதர்களை உண்டாக்கினார். ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஆளத்துவத்தோடு உருவாக்கப்பட்டுள்ளோம். ஒரே பாதையில் பயணிக்கத்தான் குடும்பம், ஆனால் அதில் சில கருத்துக்களை, சுதந்திரங்களை, விருப்பங்களை தியாகம் செய்துதான் ஆக வேண்டும்.

ஒரு கணவன் தன்னுடைய மனைவியின் ஆளத்துவங்களையும், ஒரு மனைவி தன்னுடைய கணவனின் ஆளத்துவங்களையும் சரியாக புரிந்து கொள்ளாதது அநேக பிரச்சனைகளுக்கு காரணமாகிவிடும். எளிதாக எல்லாரிடமும் பழகும் ஒரு தன்மை, அமைதியாக இருக்கும் ஒருவரால் சந்தேக கண்களோடு பார்க்கப்படலாம். வித்தியாசமான கண்ணோட்டங்களில் ஒரு பிரச்சனையை பார்க்கும் இருவர் வித்தியாசமான தீர்ப்புகளை கொண்டு வரலாம். ஆகவே ஆளத்துவ வேறுபாடுகளை சரியாக விளங்கி கொள்ள வேண்டும்.

2. தேவையில்லாத விவாதங்கள் (Basic arguments)

விவாதங்கள் நீதிமன்றத்தில் நடக்க வேண்டியவை, குடும்பங்களில் அல்ல. விவாதம் எழும்புமுன் அதை விட்டுவிடு என ஆண்டவர் நமக்கு எச்சரிக்கை கொடுத்துள்ளார். சின்ன காரியங்களில் வெளிப்படும் சில வார்த்தைகளை வைத்துக்கொண்டு பெரிய விவாதங்கள் எழுப்பப்பட்டு, தேவையில்லாத, சம்பந்தமில்லாத காரியங்கள் பேசப்பட்டு, குடும்பங்கள் சண்டைக்களமாக மாறிவிடுகிறது. எப்போதும் மனைவி தான் அடங்கி போக வேண்டும், விட்டுக் கொடுக்க வேண்டும், மன்னிப்பு கேட்க வேண்டும் என அவசியமில்லை. ஈகோவை விட்டுவிட்டு, குடும்பங்கள் பிழைப்பதற்கு யாராவது ஒருவர் அமைதியாக இருப்பது நல்லது. அவசியமில்லாத விஷயங்கள் மேல் நடத்தப்படும் தேவையில்லாத விவாதங்கள் தான் 78% குடும்ப பிரச்சனைகளுக்கு காரணம் என ஒரு ஆய்வு தெரிவிக்கிறது. விவாதங்களை தவிர்ப்போம். குடும்பங்களை காப்போம்.

3. குறைகூறுதல் (Blaming Partner)

குறைகூறுதல் ஏதேன் தோட்டத்திலேயே ஆரம்பித்த கெட்ட பழக்கம். குறைகூறும்போது பிரச்சனைக்கு காரணம் நீ தான் என மற்றவர்களை குற்றப்படுத்துவது, தீர்ப்பு சொல்வது, உணர்ச்சி ரீதியான பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. இவைதான் கோபமாக, எரிச்சலாக, பழிவாங்குதலாக, அடிதடியாக தவறான பாதையில் போவதாக பிறகு மாறி விடுகிறது. எப்போதுமே பிரச்சனைகளுக்கு ஒருவர் மட்டுமே காரணமாக இருக்க முடியாது. ஒருவருடைய செயலினால் விளையும் மறுவிளைவுகளும் காரணம். நீ தவறு செய்துவிட்டாய் என்று கூறுவதை விட, நாம் செய்து விட்டோம் என கூறுவது பிரச்சனைகளுக்கு தீர்வுகளை கொண்டு வர வாய்ப்பாயிருக்கிறது.

4. பழைய பிரச்சனைகளை பேசுதல் (Bringing old issues)

நிறைய நேரங்களில் பிரச்சனைகள் குடும்பங்களில் வெடிக்கும்போது அது பழைய பிரச்சனைகளையும் ஞாபகப்படுத்தி விடுகிறது. பெண்கள் அவ்வளவு எளிதாக பிரச்சனைகளை மறக்கிறதில்லை என உளவியல் கூறுகிறது. இன்றைக்கு நடக்கும் பிரச்சனைகளுக்கு வலு சேர்ப்பதற்கும், நம் பக்கம் உள்ள நியாயத்தை வெளிக் கொண்டு வரவும் துணைக்கு நாம் அழைக்கும் பழைய பிரச்சனைகள் உறவுகளை வெட்டிவிடும் குள்ளநரிகள் என்பதை நாம் ஞாபகத்தில் கொள்ள வேண்டும். தீர்க்கப்பட்ட பிரச்சனைகளை திரும்ப கொண்டு வராதிருக்க தீர்மானிப்போம்.

5. வளர்ப்பு முறை (Brought up)

வளர்ப்பு முறை நம்முடைய சுபாவங்கள் உருவாக்கப்படுவதற்கு ஒரு முக்கிய காரணமாயிருக்கிறது. கண்டிப்புடன் வளர்க்கப்பட்ட ஒருவரும், அதிக அன்புடன், செல்லத்துடன் வளர்க்கப்பட்ட ஒருவரும், குடும்பமாக இணைந்து வாழ தொடங்கும்போது கண்டிப்பாக பிரச்சனைகள் வரலாம். உணவு முறை, பழகுதல், பேசுதல், வீட்டை சுத்தமாக வைத்திருத்தல், ஆடை அணிதல் என எல்லாமே வளர்ப்புமுறையின் அடிப்படையில் வருகிறது. இப்படிப்பட்ட வித்தியாசங்களை பார்க்க நேரிடும்போது அதை கண்ணியத்துடனும், மரியாதையுடனும் ஏற்றுக் கொள்ள பழகுவது நல்லது. என்ன பிள்ளை வளர்த்திருக்காங்க என ஆரம்பிப்பது, மதகை திறந்துவிடுகிறதை போல என்பதை நினைவில் நிறுத்த வேண்டும்.

6. மதிப்பீடுகள் (Basic life values)

வாழ்க்கையை குறித்த வித்தியாசமான மதிப்பீடுகள் அநேக நேரங்களில் குழப்பங்களைக் கொண்டு வரலாம். எது மிகவும் அவசியம்? பணத்தை எப்படி செலவிட வேண்டும்? பிள்ளைகளை எப்படி வளர்க்க வேண்டும்? எந்த அளவிற்கு பொழுதுபோக்கு அம்சங்களை பயன்படுத்தலாம்? ஆலய, ஈடுபாடு எந்த அளவிற்கு? நோக்கங்கள் என்ன? என எல்லாவற்றிலும் கருத்து வேறுபாடுகள் ஆழமாக இருக்கலாம். இவைகள் பிரிவினைக்கு காரணமாக அமைந்து விடாதபடி, மேலே இருக்கிறவர் கீழே வரவும், கீழே இருக்கிறவர் மேல ஏறவும், ஒரு சமநிலையான, முடிவிற்கு வருவது குடும்பத்திற்கு நல்லது.

7. சுயநல எண்ணங்கள் (Self- centered thoughts)

என்னுடைய எண்ணங்கள், திட்டங்கள், நோக்கங்கள், விருப்பங்கள் மட்டும் தான் செய்யப்பட வேண்டும் என யார் நினைத்தாலும் குடும்பத்திற்கு அது ஆபத்துதான். சுயநல எண்ணங்கள் நம்மை ஆட்கொள்ளாதபடி காத்துக்கொள்ள வேண்டும். வாழ்க்கைத்துணையின் கருத்துக்களை, உணர்ச்சிகளை, எண்ணங்களை மதிக்க பழகுவது மிகவும் நல்லது.

8. பாலியல் பிரச்சனைகள் (Sex)

பாலியல் பிரச்சனைகள் குடும்ப பிரச்சனைகளுக்கு ஒரு பெரிய, முக்கிய காரணமாக அமையலாம். வெளியே அதிகம் பேசப்பட முடியாததால், இந்தப் பிரச்சனை அநேக குடும்பங்களில் வேறு ரூபத்தில் வெளியே வரும். முரண்பாடான எதிர்பார்ப்புகள், தேவையில்லாத பயங்கள், தனிமைக்கு பஞ்சங்கள், அதிக ஆவிக்குரிய ஈடுபாடுகள் இவைகளெல்லாம் பாலியல் பிரச்சனைக்கு காரணமாக இருக்கலாம். பகலில் தன் மனைவியை சரியாக நடத்த தெரியாத கணவன், இரவில் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதோ, இரவில் தன் கணவனை சரியாக நடத்தாத மனைவி, பகலில் அன்பை எதிர்பார்ப்பதோ நடக்காத காரியம் என உளவியல் நிபுணர்கள் கூறுகிறார்கள். பாலியல் பிரச்சனை மற்ற பிரச்சனைகளை விட அதிக ஆபத்தானவை. தடம்மாறி போகப் பண்ண கூடியவை. மிகவும் எச்சரிக்கையுடன் நடக்க வேண்டியது அவசியம்.

9. சந்தேகப்படுதல் (Suspicion)

கணவன், மனைவியின் வார்த்தைகளை, நடத்தையை, பழகுதலை, பிறரோடு உள்ள உறவுகளை சந்தேக கண்களோடு பார்க்க ஆரம்பித்தால் வாழ்க்கை நரகமாகிவிடும். சந்தேகம் ஒரு கேன்சர் வியாதியை போல் என்பதை மறந்துவிட கூடாது.

இப்படி காரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். இதற்கு என்ன தீர்வு காண்பது.

1. முதலாவதாக பிரச்சனைக்கு எது காரணம் என்பதை கண்டுபிடியுங்கள். பின்பு அதை குறித்து மனம்விட்டு பேசி தீர்வு காண முயற்சியுங்கள்.
2. சின்னகாரியத்தை ஒருபோதும் பெரிதாக்கி விடாதீர்கள்.
3. பிரச்சனைக்கு யார் முக்கிய காரணம் என்கிற ஆராய்ச்சியை விட்டுவிட்டு, பிரச்சனையில் என்னுடைய பங்கு என்ன என யோசிக்க ஆரம்பியுங்கள். தீர்வு வந்துவிடும்.
4. பிரச்சனைகளை தீவிரமடையவிடாமல், உடனுக்குடன் முடித்துவிடுங்கள்.
5. இரண்டுபேரும் ஒத்துக்கொள்ளக் கூடிய தீர்வுக்கு வாருங்கள். ஒருவருடைய தீர்வு இன்னொருவர் மேல் திணிக்கப்பட வேண்டாம்.

6. பேசும்போது குறிப்பிட்ட பிரச்சனைக்கு தீர்வுகாணுங்கள். பொதுவான காரியங்களுக்கு வேண்டாம்.
7. உங்களுடைய உணர்ச்சிகளை நேர்மறையாக வெளிப்படுத்த பழகுங்கள்.
8. விவாதம் பண்ணி ஜெயிக்க வேண்டும், என் பக்கம் தான் சரி என்பதை நிரூபிக்க முயற்சிக்க வேண்டாம் ஒருவேளை விவாதத்தில் ஜெயிக்கலாம், ஆனால் வாழ்க்கையில் தோற்றுவிட வாய்ப்புண்டு.
9. தேவைப்பட்டால் ஊழியர்களின், ஆலோசகர்களின் உதவியை நாடுங்கள்.
10. நிபந்தனையற்ற அன்பை செலுத்த முயற்சியுங்கள்.

பிரச்சனைகளை தவிர்க்க ஆண்டவர் கிருபை புரிவாராக.


பிரச்சனைகளை தீர்க்க பயன்படுத்தும் முறைகள்

சரியான முறை	தவறான முறை
நேர் மற்றும் எதிர்மறையான உணர்ச்சிகளை வெளிப்படுத்துதல்	எதிர்மறையான உணர்ச்சிகளை மட்டும் வெளிப்படுத்துதல்
உண்மையான, நேர்மையான தகவல்களை கொடுத்தல்	சாதகமான தகவல்களை மட்டும் கொடுத்தல்
பிரச்சனையைமட்டும் மையப்படுத்துதல்	பிரச்சனைக்குரியவரை மையப்படுத்துதல்
இருதரப்பு தவறுகளையும் ஏற்றுக்கொள்ளுதல்	இருதரப்பு தவறுகளையும் ஏற்றுக் கொள்ளுதல்
குடும்பம் பாதிக்கப்படாமல் மாற்றங்களை யோசித்தல்	மாற்றங்களை செய்யாமல் பிரச்சனைகளை பொறுத்துக்குதல்
இருவரும் ஜெயிக்க வேண்டும் என நினைத்தல்	மற்றவர் எப்படியாவது தோற்கடிக்கப்பட வேண்டும் எனமுயற்சித்தல்
பிரச்சனைகளுக்கு தீர்வுகளை கொண்டு வருவதின் மூலம் நெருக்கத்தை அதிகரித்தல்	பிரச்சனைகளை முற்றவிட்டு நெருக்கத்தை குறைத்தல்
நம்பிக்கையை வளர்த்தல்	சந்தேகத்தை உருவாக்குதல்

தீர்விற்கான முக்கிய தடைகள்

1. பிரச்சனைக்கு ஒருவர் தான் காரணம் என முடிவுக்கு வருவது.
2. எதையும் கண்டுகொள்ளாமல் தன்னுடைய வழியில் போவது.
3. வித்தியாசங்களை புரிந்துகொள்ள முயற்சி எடுக்காதது.
4. துணையின் கருத்துக்களை, உணர்ச்சிகளை மதிக்க தவறுவது.
5. தேவையற்ற பிரச்சனைகள்மேல் தீவிரமாக விவாதித்து கொண்டிருப்பது.

இயேசு ஏன் பிறந்தார்?



1. பாவிகளை இரட்சிக்க (மத்தேயு 1:21).
2. தேவனுடைய அன்பை வெளிப்படுத்த (யோவான் 3:16).
3. பிசாசின் கிரியைகளை அழிக்க (1 யோவான் 3:8).
4. தேவனோடு மனிதனை ஒப்புரவாக்க (2 கொரிந்தியர் 5:19).
5. நித்திய ஜீவனை அளிக்க (யோவான் 10:10).



சோதனைக் காலத்திற்கு தப்புவிப்பார்

திருமதி. கெட்சியாள் மோகன்
President, Women's Fellowship Department

கிறிஸ்துவுக்குள் அன்பான பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! வரப்போகும் சோதனை காலத்தில் தேவன் நமக்குத் தந்திருக்கும் வாக்குத்தத்தங்கள் மற்றும் நம்முடைய கடமைகள் மற்றும் பொறுப்புகளைக் குறித்து இவ்விதழில் பார்ப்போம்.

வெளி. 3:10-ல் என் பொறுமையைக் குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக் கொண்டபடியினால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின் மேலெங்கும் வரப்போகிற சோதனை காலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன் என்று ஆண்டவர் நமக்கு வாக்களித்திருக்கிறார். இக்கடைசிக் காலத்தில் முழு உலகிற்குமான ஒரு சோதனைக் காலம் வருகிறது. அப்போது கள்ளக்கிறிஸ்துக்களும், கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள் (மத்தேயு 24:24) என்று பார்க்கிறோம். இந்தக் காலத்தில் அது நிறையவே காணப்படுகின்றன. இப்படிப்பட்டவர்களுக்கு நாம் அதிக ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். எல்லாவற்றையும் நிதானித்து அறிய வேண்டும். அடையாளங்களுக்கும், அற்புதங்களுக்கும் எளிதில் வசப்பட்டு விடக்கூடாது. தீர்க்கதரிசனங்களை நம்பி ஏமாந்து போய்விடக்கூடாது. நம்மை வழிநடத்த வேதவசனங்கள் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. வசனங்களுக்கு புறம்பான ஒன்றையும் நாம் ஏற்றுக் கொள்ளக்கூடாது. யுத்தங்களும், பஞ்சங்களும் , கொள்ளை நோய்களும் வரும், சூரியன் அந்தகாரப்படும். நட்சத்திரங்கள் கீழே விழும். இப்படிப்பட்ட காரியங்கள் நடந்து முடிந்தவுடன் இயேசு கிறிஸ்துவின் வருகை இருக்கும். அதற்காக நாம் காத்திருக்க வேண்டும், விழித்திருந்து ஜெபிக்க வேண்டும்.

நம்முடைய உத்தரவாதமாகிய அழைப்பில் உண்மையும் விவேகமும் உள்ளவர்களாய் இருக்க வேண்டும். தாமதிக்கிறார் என்று அசதியாயிருந்து. நம்முடைய உடன் வேலையாட்களை துன்புறுத்தக்கூடாது. தூங்கிக் கொண்டிருக்கக்கூடாது. புத்தியுள்ள கன்னிகைகளைப் போல எண்ணெயுடன் விழித்திருக்க வேண்டும். எண்ணெயாகிய பரிசுத்த ஆவியானவர் பாஷைகளைப் பேசுவதற்கு மாத்திரமல்ல. அவரால் நமக்கு பெலன் கிடைக்கிறது. உன்னதத்திலிருந்து வரும் பெலன். அதனால் நாம் பெலனடைந்து நம் வாழ்வைப் பரிசுத்தமாகக் காத்துக் கொள்ளலாம். மற்றவர்களுக்கும் இரட்சிப்பின் நற்செய்தியை தைரியமாக அறிவிக்கலாம். அவருடைய வரங்களைப் பெற்று மற்றவர்களையும் ஆதாயமாக்கலாம். மாமிசம், உலகம், பிசாசு ஆகியவைகள் நாம் உயிரோடு இருக்கும் காலமெல்லாம் நம்மோடு போராடிக் கொண்டிருக்கும். நாமும், நம்முடைய பிள்ளைகளும் இந்த போராட்டங்களில் அகப்பட்டுக் கொள்ளாதபடி ஜாக்கிரதையாய் இருந்து ஜெபிக்க வேண்டும். விசேஷமாக நம் பிள்ளைகள், நவீன கால போராட்டங்களுக்குள் சிக்கிக் கொள்ளாமல், யோசேப்பைப் போல, தானியேலைப் போல தங்களைக் காத்துக்கொள்ள ஜெபிக்க வேண்டும். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனாலும் திடன்கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன் (யோவான் 16:33) என்று ஆண்டவர் கூறியிருக்கிறார். உலகமெங்கும் சோதனைக்காலம் வந்தாலும், இவைகள் அதிசீக்கிரத்தில் நீங்கிவிடும் லேசான உபத்திரவம் என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார் “இந்த லேசான உபத்திரவம் அதி சீக்கிரத்தில் நீங்கிவிடும்” என்று அடிக்கடி சொல்லுங்கள், சத்தமாகச்

சொல்லுங்கள். இப்படி நீங்கள் போகும் பாதையில் வரும் சோதனைகளை சகித்துக் கொண்டீர்களானால், உங்களுக்கு நித்திய கன மகிமை கிடைக்கும் என்று பவுல் அப்போஸ்தலன் கூறுகிறார். அழிவில்லாத மகிமை. அது தான் நம்முடைய பலன், வெகுமதி (reward).

அப்போஸ்தலனாகிய பவுல், 'வெகு மனத்தாழ்மையோடும், மிகுந்த கண்ணீரோடும், யூதருடைய தீமையான யோசனைகளால் எனக்கு நேரிட்ட சோதனைகளோடும், நான் கர்த்தரை சேவித்தேன் (அப்.20:19) என்று கூறுகிறார். எங்களுடைய புதிய சபை கட்டப்படுமுன்னே நாங்கள் எதிர்கொண்ட பிரச்சனைகள் ஏராளம். அரசாங்கமே விரோதமாய் எழும்பிற்று. நாங்கள், சபையாய் 30 நாட்கள் உபவாசித்து ஜெபித்தோம். விரோதமாய் எழும்பினவர்கள் காணப்படாமற் போனார்கள். கர்த்தர் எங்களை அதிசயமாய் தப்புவித்து, நேர்த்தியாய் காரியங்களை முடித்துக் கொடுத்தார். நாம் ஆண்டவருக்கு முன்பாக உண்மையாக இருந்து, அவருடைய முகத்தைத் தேடும்போது, நம்மை விடுவிப்பார். அப்போஸ்தலனாகிய பவுல், கடந்து போன பாதைகளை நினைத்தால், திகைத்துப் போவீர்கள். பசி, நிர்வாணம், கசையடிகள், கப்பற்சேதம், மிருகங்களால் வந்த நாசம்... அதுபோன்ற பாடுகளை நாம் யாரும் அனுபவிக்கவில்லை. ஆனாலும், சகல உபத்திரவங்களிலும் அவர் கர்த்தரை சேவித்தார்.

லூக்கா 8:13-ல், கற்பாறையின் மேல் விழுந்த விதையைக் குறித்து வாசிக்கிறோம், அவர்கள் சந்தோஷமாய் வசனத்தை ஏற்றுக் கொண்டாலும், சோதனைக் காலத்தில் பின்வாங்கிப் போகிறார்கள். நாம் வசனத்தை ஆழமாய் ஏற்றுக்கொண்டு விசுவாசிக்க வேண்டும். வசனம் வாசிக்கும்போது, கருத்தை உணர்ந்து வாசிக்க வேண்டும். தனியான இடத்தையும், நேரத்தையும் குறித்துக் கொள்ள வேண்டும், கர்த்தர் பேசும் காரியங்களை நோட்டுப் புத்தகத்தில் குறித்துக் கொள்ள வேண்டும், இப்படி வசனத்தில் ஆழமாய் நிலைத்திருக்கும்போது, நமக்கு வரும் சகல சோதனைகளிலும், நாம் பின்வாங்காமல், விசுவாசத்தோடு இருப்போம்.

மேலும், மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல், வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை என்று பவுல் கூறுகிறார். எனக்கு ஏன் இந்த ஆப்ரேஷன்? எங்கள் வீட்டில் ஏன் இந்த மரணம்? இப்படி நீங்கள் அங்கலாய்த்துக் கொண்டு இருப்பீர்களானால், மனுஷருக்கு நேரிடுகிற சோதனை அல்லாமல், வேறே சோதனை நேரிடவில்லை என்பதை நினைத்துக் கொள்ளுங்கள். எங்கள் குடும்பத்திலும் இழப்புகள் வந்தபோது தேவன் எனக்கு கொடுத்த வசனம் இது. நான் மாத்திரம் இந்த பாதையில் கடந்து போய்க் கொண்டிருக்கிறேன் என்று நினைக்காதீர்கள். எல்லோரும் ஏதோ ஒரு விதத்தில் சோதனைகளுக்குள் கடந்துப்போய் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் போய்க்கொண்டிருக்கும் அதே பாதையிலும், அநேகர் போய்க் கொண்டிருக்கிறார்கள். சோதனையின் வழியாக நாம் கடந்துபோகும்போது, அதை தாங்கத்தக்கதாக கிருபையைக் கொடுப்பார். அவர் உண்மையுள்ளவர். திராணிக்கு மேலாக, நம்முடைய பெலத்திற்கு மேலாக சோதிக்கப்படுவதற்கு இடங்கொடுக்க மாட்டார். சோதனையைத் தாங்கத்தக்கதாக, அதற்குத் தப்பிக் கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார். யாக்.1:2-ல் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, அதை சகித்துக்கொள்ள வேண்டுமென்று வாசிக்கிறோம். 12 ஆம் வசனத்தில், சோதனையை சகிக்கிற மனுஷன் பாக்கியவான் என்றும் அவன் உத்தமனென்று விளங்கினபின்பு, ஜீவகிரீடத்தைப் பெறுவான் என்றும் வாசிக்கிறோம். தேவன் பொல்லாங்கினால் சோதிக்கிறவர் அல்ல. 1 பேதுரு 1:6-ல் துன்பப்படுவது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சக்காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள் என்று வாசிக்கிறோம். கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களை சோதனையினின்று இரட்சிக்க அறிந்திருக்கிறார் (2 பேதுரு 2:9). பலவிதமான போராட்டங்களில் அகப்படும்போது, தேவன் சோதனையினின்று இரட்சிக்க வல்லவர் என்று விசுவாசிக்க வேண்டும்.



செப்பனியா

புத்தக அறிமுகம்

Rev. Dr. சாமுவேல் ராஜ் R.
All India National Director, Global University,

சிறிய தீர்க்கதரிசிகளின் வரிசையில் ஒன்பதாவது தீர்க்கன் செப்பனியா. இவனுடைய தீர்க்கதரிசனத்துக்கு பின்பு சில வருடங்களில் யூதா பாபிலோனுக்குச் சிறை சென்றது (கிமு 586): 2 இரா.23:34; 24:6,17,18. செப்பனியா புத்தகத்தை அறிந்துகொள்ள இக்கட்டுரை நமக்கு உதவும்.

I. செப்பனியா என்ற தீர்க்கதரிசி :

எரேமியா, ஆபகூக், நாகூம், செப்பனியா ஆகியோர் தெற்கு ராஜ்யமாக யூதாவில் ஒரே காலத்தில் ஊழியம் செய்தார்கள். எரேமியா செப்பனியாவை விட வயதில் சிறியவன்.

செப்பனியா என்ற பெயருக்கு பல்வேறு அர்த்தங்கள் உண்டு; "தேவன் மறைத்து வைக்கிறார்", "தேவன் பாதுகாக்கிறார்", "யெகோவாவின் காவல்காரன்".

யூதாவில் யோசியா ராஜாவாகயிருந்த காலத்தில் (கிமு689-609), செப்பனியா யூதாவில் ஊழியம் செயதான். இவன் எசேக்கியா ராஜாவின் மூன்றாம் தலைமுறைப் பேரன் ஆவான்.

II. செப்பனியாவின் காலத்தில் யெகோவா மார்க்கம் :

யாத்திராகமம் 12ம் அதிகாரத்தில் இஸ்ரவேலர் எகிப்தில் பஸ்காவை ஆசரித்தனர். தேவன் அவர்களை விடுவித்து கானானுக்கு நேராய் வழிநடத்த மோசேயை பயன்படுத்தினார். எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்ற இந்த ஜனங்கள், வருடந்தோறும் ஆபிப் மாதத்தில் தங்கள் விடுதலை யாத்திரையை நினைத்து பஸ்காவை ஆசரிக்க வேண்டும் என்பது தேவனுடையப் பிரமாணமாகும் (உபா. 16:1).

அதன்பின்பு, மோசேயின் காலத்தில் சீனாய் மலையில் பஸ்கா ஆசரிக்கப்பட்டது. அவர்கள் கானானுக்குள் பிரவேசித்தபின் கில்காலில் யோசுவாவின் தலைமையில் பஸ்கா ஆசரிக்கப்பட்டது.

யோசுவா மரித்தபின், நியாயாதிபதிகளின் புத்தகத்தில் நாம் வாசிக்கிறபடி (நியா. 2:8-13) "அக்காலத்திலிருந்த அந்த சந்ததியர் எல்லாரும் தங்கள் பிதாக்களுடன் சேர்க்கப்பட்டபின்பு, கர்த்தரையும் அவர் இஸ்ரவேலுக்காகச் செய்த கிரியையும் அறியாத வேறொரு சந்ததி அவர்களுக்குப்பின் எழும்பிற்று. அப்பொழுது அவர்கள் கர்த்தரை விட்டு பாகாலையும் அஸ்தரோத்தையும் சேவித்தார்கள்".

நியாயாதிபதிகளும், சாமுவேல் தீர்க்கதரிசியும்:

நியாயாதிபதிகளின் காலத்துக்குப்பின், நலிவடைந்திருந்த யேகோவா தேவனுடைய மார்க்கத்தை எடுத்து நிறுத்த சாமுவேல் தீர்க்கதரிசியைக் கர்த்தர்

எழுப்பினார். சாமுவேலின் காலத்திலும் சிலர் கர்த்தரைப் பின்பற்றினர். பிறர் கானானியருடைய விக்கிரக வழிபாடுகளில் நிலைத்திருந்தனர்.

சவுல், தாவீது, சாலொமோன்:

சவுல், தாவீது, சாலொமோன் என்னும் ராஜாக்களை கர்த்தர் அவர்களுக்கு தந்தார். தாவீது கர்த்தருக்குப் பிரியமாய் வாழ ஜனங்களைக் கர்த்தரிடம் திருப்பினான். சவுல் தனக்குப் பேர் உண்டாக்க கர்த்தரை விட்டுவிட்டான். சாலொமோன் கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டினாலும். புறஜாதியப் பெண்கள் ஏராளம்பேரை திருமணம் செய்து அவர்களது விக்கிரக வழிபாடுகளையும் இஸ்ரேவேல் தேசத்துக்குள் கொண்டுவந்து விட்டான்.

சாலொமோனுக்குப்பின்:

சாலொமோனுக்குப்பின் தேசம் இரண்டாகப் பிரிந்தது (கிமு 931; 1இரா 12:17-20).

வடக்கு ராஜ்யம்:

"வடக்கு ராஜ்யம்" எனப் பிரிந்தவர்கள், பழைய பெயராகிய "இஸ்ரவேல்" என்பதை தங்கள் தேசப் பெயராகக் கொண்டனர். இந்த இஸ்ரவேல் தேசம் கி.மு.722-ல் அசீரியாவால் அழிக்கப்பட்டு சிறையாகக் கொண்டு செல்லப்பட்டனர் (2இரா.17:18). தேசம் இரண்டாகப் பிளவுற்றபின், கிமு 931-க்கும் கிமு722-க்கும் இடைப்பட்டக் காலத்தில் 19 ராஜாக்கள் இந்த இஸ்ரவேலை ஆண்டார்கள். அவர்களில் ஒருவர்கூட பஸ்காவை ஆசரிக்கவில்லை. விருப்பப்பட்ட சிலரைத் தவிர பிறர் எருசலேம் தேவாலயத்துக்குத் தேவனை தொழுதுகொள்ள வரவில்லை. இவர்களை யேகோவா தேவன் பக்கம் திருப்ப எலியாவையும் எலிசாவையும் கர்த்தர் பயன்படுத்தினார்.

தெற்கு ராஜ்யம்:

"தெற்கு ராஜ்யம்" எனப்பிரிந்தவர்கள் "யூதா" என்று தங்கள் தேசத்துக்குப் பெயர் வைத்துக்கொண்டனர். சாலொமோனுடைய காலத்துக்குப்பின் "யூதா" கிமு 586-ல் பாபிலோனுக்குச் சிறை சென்றனர். (2இரா.25 அதி) கி.மு 931 முதல் கிமு.586 வரை யூதாவை 20 ராஜாக்கள் ஆண்டு வந்தனர். அவர்களில் எசேக்கியா, யோசியா ஆகிய இரண்டு ராஜாக்கள் மட்டுமே பஸ்காவை ஆசரித்தனர் (2நாளா.30:1; 2இரா. 23:23; 2நாளா.35:11).

யோசியா கர்த்தரை நேசித்தான். நீண்ட காலமாக நிறுவப்பட்டிருந்த சிலை வழிபாடுகளை அழித்தான். தேவாலயம் சுத்திகரிக்கப்பட்டது. நியாயப் பிரமாணப் புத்தகம் கண்டெடுக்கப்பட்டது. பஸ்கா ஆசரிக்கப்பட்டது. இதனால் யெகோவா தேவனுடைய மார்க்கத்தில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. முழுதேசமும் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து விக்கிரக வணக்கமும், கானானியருடைய மார்க்க வழிபாடுகளும் கைவிடப்பட்டன.

இந்த மறுமலர்ச்சியில் செப்பனியாவின் ஊழியம் பெரும் பங்குடையதாயிருந்தது. எனினும் யோசியாவுக்குப் பின் வந்த யோவகாஸ், யோயாக்கீம், யோயாக்கீன், சிதேக்கியா ஆகிய நான்கு ராஜாக்களின் காலத்தில் மீண்டும் கர்த்தருடைய மார்க்கம் எண்ணப்படாமற்போயிற்று.

எரேமியா சொன்ன வாக்கின்படியே கிமு 586-ல் யூதாவின் மக்களனைவரும் பாபிலோனுக்குச் சிறையாகக் கொண்டு செல்லப்பட்டனர். தேசம் எழுபது வருஷம் வனாந்தரமும் பாழுமாகக்கிடந்தது (எரே. 25:11; 29:10-14).

III. செப்பனியாவின் பிரசங்கங்கள்:

செப்பனியாவின் செய்திகள் மார்க்கச் சீர்திருத்தங்களைக் கொண்டு வரும்படி, யோசியா ராஜாவை ஊக்குவித்தன எனக் கணிக்கலாம்.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் நாளாகிய ''பெரிய நாள்'' சமீபமாயிருக்கிறது என்பதே செப்பனியாவின் பிரதானமான செய்தியாயிருந்தது (1:14).

யூதாவின் பாவத்துக்குத் தக்க பலன் தண்டனையாகக் கிடைக்கும் என்றான், செப்பனியா யூதாவைச் சுற்றியிருந்த ஐந்து தேசங்களைப்பற்றிக் குறிப்பிடுகிறான் (2:4-15).

பெலிஸ்தியா:

பெலிஸ்தியாவின் பட்டணங்களாகிய காத்சா, அஸ்கலோன், அஸ்தோத், எக்ரோன் ஆகியவை அழிக்கப்படும் என்று தீர்க்கதரிசினம் சொல்லுகிறான்.

மோவாப், அம்மோன்:

கர்த்தருடைய ஜனங்களுக்கு எதிரான அவர்களது பெருமைக்கும், அகங்காரத்துக்கும் தண்டனை வரும். இந்தத் தண்டனை, சோதோம், கொமோராவுக்கு வந்ததுபோல வரும் என்று உரைக்கிறான்.

கூஷ்: (எத்தியோப்பியா):

இவர்கள் கர்த்தருடையப் பட்டயத்துக்கு இரையாவார்கள்.

அசீரியாவும் அதின் தலைநகராகிய நினிவேயும்:

கர்த்தரின் செயலால் அசீரியா பாழ்நிலமாகும். அது காட்டு விலங்குகளின் குடியிருப்பாகும் என்று உரைத்தான். செப்பனியாவின் இந்தத் தீர்க்கதரிசனத்தின்படியே இன்று 2600 ஆண்டுகளுக்குப்பின் ஈரான் பகுதிகளில் ஏற்படும் அழிவுகளை நாம் பார்க்கிறோம். செப்பனியாவின் இந்த துல்லியமானத் தீர்க்கதரிசன வெளிப்பாடு கர்த்தரிடத்திலிருந்து வந்தது என்றும் அறிகிறோம்.

மத்திய கிழக்குப் பகுதிகளில் இன்று நடக்கும் யுத்தங்களும், பிற நிகழ்வுகளும் நமது உலகம் ஒரு முடிவுக்கு வருகிறது என்ற செப்பனியாவின் தீர்க்கதரிசன வார்த்தைகளாக எடுத்துக்கொள்ளலாம். இச்சூழ்நிலையில் தமது மக்களை தேவன் மீட்டுக்கொள்ளுவார் என்ற தீர்க்கதரிசியின் உற்சாகமளிக்கும் வார்த்தைகள் ஆறுதலைத் தருகிறது.

இன்றுவரை இயேசுவைத் தங்கள் மேசியாவாக ஏற்றுக்கொள்ளாத யூதரும் உலகத்தின் இறுதிகால இந்த சம்பவங்களைப் பார்த்து, கர்த்தரை நீதியுள்ள தேவனென்று புகழ்ந்து பாடுவர் என்பது செப்பனியாவின் நம்பிக்கையாகும்.

IV. செப்பனியா புத்தகத்தின் கருப்பொருள் வசனம்:

செப். 2:3 கர்த்தரை தேடுங்கள், மனத்தாழ்மையைத் தேடுங்கள். அப்பொழுது ஒரு வேளை கர்த்தருடைய கோபத்தின் நாளிலே மறைக்கப்படுவீர்கள்.

செப்பனியாவின் செய்தியைக்கேட்டு யோசியா ராஜாவின் மார்க்க எழுப்புதலில் (கிமு.627-609) பெரியதொரு மனந்திரும்புதல் ஏற்பட்டதாக நாம் வாசித்தறிகிறோம்.

V. எருசலேமுக்குப் பிரதான செய்தி:

புறஜாதிய தேசங்கள்மேல் வரும் அழிவையும் நியாயத் தீர்ப்பையும் அறிவித்த செப்பனியா, மீண்டும் மீண்டும் எருசலேமின் பாவங்களை எடுத்துச் சொல்லுகிறான். எனினும் தேவன் தமது ஜனங்களை திரும்பவும் கூட்டிச் சேர்த்து அவர்களை நிலை நிறுத்துவார் என்றும், அது எக்காலத்தில் சம்பவிக்கும் என்பதையும் தீர்க்கதரிசி முன்னறிவிக்கிறான், ஒரு பெரிய மனமாற்றம் இன்றைய யூத ஜனங்கள் மத்தியில் உண்டாகி, அவர்கள் கர்த்தரால் சந்தோஷப்பட்டு ஆர்ப்பரிப்பார்கள்; கர்த்தர் வெற்றி வீரராய் அவர்கள் மத்தியில் இருப்பார் என்பதும் செப்பனியாவுக்குக் கிடைத்த தீர்க்கதரிசன வெளிப்பாடு ஆகும்.

VI. செப்பனியா புத்தகத்தின் பொருளடக்கம்:

மூன்றே அதிகாரங்களைக் கொண்ட செப்பனியா புத்தகத்தை நான்கு பிரிவுகளாகப் பகுத்துப் பொருளடக்கம் தரலாம்.

1. யூதாவின்மேல் வரும் நியாயத்தீர்ப்பும், சீர்திருத்த நடவடிக்கையும் (செப்பனியா 1-ம் அதிகாரம்).
2. புறஜாதிய தேசங்களுக்கு எதிரான நியாயத்தீர்ப்பின் செய்தி (செப்பனியா 2-ம் அதிகாரம்).
3. கர்த்தர் தேசங்களில் தனக்கென மீதியாய் வைத்திருக்கும் ஒரு சிறுகூட்டம் (செப்பனியா 3:1-11).
4. இஸ்ரவேலில் கர்த்தர் தமக்கென மீதியாய் வைத்திருக்கும் சிறுகூட்டம் (செப்பனியா 3:12-20).

யூதா பாபிலோனுக்கு சிறையிருப்பில் செல்லும் என்று எரேமியா அறிவிப்பதற்கு முன்பே அதை பற்றி தீர்க்கதரிசனம் உரைத்தது செப்பனியா ஆகும். கர்த்தர் தமது ஜனங்கள் மேலுள்ள தமது கோபத்தை வெளிப்படுத்தினாலும், தமது ஜனத்தில் ஒரு சிறு கூட்டத்தை மீதியாக வைப்பார் (REMNANT), அது எருசலேமுக்குள்ளும் பாதுகாக்கப்படும், புறஜாதியர் தேசங்களிலிருந்தும் பாதுகாக்கப்படும் என்ற செப்பனியாவின் செய்தி கர்த்தரை உறுதியாய்ப் பற்றிக்கொண்டு வாழ நம்மை ஊக்குவிக்கிறது, உறுதியுடன் கர்த்தருக்காக வாழுவோம், அவர் நம்மைப் பாதுகாப்பார் என்பது நிச்சயம்.

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை சந்தா மற்றும் உதவித் தொகை அனுப்ப வேண்டிய விபரம்

குறிப்பு: காசோலை / டிராப்ட் எடுக்கும்போது Tamil District Council of SIAG என்று எடுத்து பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு என்று குறிப்பிட்டு அனுப்பவும். மணியாடர் அனுப்புவதை தவிர்க்கவும். பத்திரிக்கை ஊழியத்திற்கு மணியாடர் மூலம் தான் அனுப்ப முடியும் என்ற நிலையில் உள்ளவர்கள் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

ஏ.ஜி. தலைமை அலுவலகம்

30, நாவலர் நகர், மதுரை-625 016. போன் : 0452 4200664

தேவ ஜனங்களும், நற்கிரியைகளும்

1. நற்கிரியைகளைச் செய்வதற்கு கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டவர்கள் (எபே. 2:10).
2. நற்கிரியைகளைச் செய்ய ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் (தீத்து 3:8).
3. நற்கிரியைகளாகிய கனிகளை கொடுக்க வேண்டும் (கொலோ. 1:10).
4. நற்கிரியைகளைச் செய்யப்பழக வேண்டும் (தீத்து 3:14).
5. நற்கிரியைகளால் நிறைந்திருக்க வேண்டும் (அப். 9:36).
6. நற்கிரியைகளைச் செய்வதற்குப் பக்தி வைராக்கியம் இருக்க வேண்டும் (தீத்து 2:14).
7. எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவர்களாய் இருக்க வேண்டும் (2 தீமோ. 3:17).
8. நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாய் இருக்க வேண்டும் (1தீமோ.6:18).
9. நற்கிரியைகளில் ஸ்திரப்பட வேண்டும் (2 தெச.2:17).
10. நற்கிரியைகளில் பூரணராக வேண்டும் (எபி.13:21).
11. எந்த நற்கிரியையும் செய்ய ஆயத்தமாயிருக்க வேண்டும் (2தீமோ.2:21; தீத்து 3:1).
12. நற்கிரியைகளில் பெருக வேண்டும் (2 கொரி. 9:8).
13. நற்கிரியைகளை செய்வதற்கு ஒருவரையொருவர் ஏவ வேண்டும் (எபி. 10:24).
14. மற்றவர்களுடைய புகழ்ச்சியைப் பெறும்படி நற்கிரியைகளைச் செய்யக்கூடாது (மத். 6:1-18).
15. தேவபக்தியுள்ள ஸ்திரீகள் நற்கிரியைகளை வெளிப்படுத்த வேண்டும் (1தீமோ.2:10).
16. தேவன் உங்கள் நற்கிரியைகளை நினைப்பார் (நெகே.13:14; எபி.6:9,10).
17. உங்கள் கிரியைகள் நியாயத்தீர்ப்பு நாளிலே வெளிப்படும் (பிரசங்கி 12:14; 2 கொரி. 5:10).

நாம் செய்ய வேண்டிய சில நற்கிரியைகள்

1. திக்கற்ற பிள்ளைகளையும், விதவைகளையும் விசாரித்தல் (யாக்.1:27; சங். 68:5; யோபு 29:13).
2. பசியாயிருப்பவர்களுக்கு போஜனங்கொடுத்தல் (மத்.25:35).
3. அந்நியர்களை உபசரித்தல் (மத். 25:35; எபி. 13:2; ரோமர் 12:13).
4. வஸ்திரமில்லாதவர்களுக்கு வஸ்திரம் கொடுத்தல் (மத். 25:35).
5. வியாதியஸ்தர்களைச் சந்தித்தல் (மத். 25:35; லூக்கா 4:40; யாக்.5:14,15) .
6. சிறைச்சாலைகளில் இருப்பவர்களை நினைவு கூறுதல் (மத்.25:35; எபி. 10:34; 13:3).
7. ஏழைகளுக்கு உதவிக்கரம் நீட்டுதல் (1தீமோ. 6:17-19; யோபு 29:12; நீதி.31:20).
8. ஒருவர் பாரத்தை ஒருவர் சுமத்தல் (கலா. 6:1,2).
9. ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துதல் (எபி.3:12,13).
10. தேவனுடைய புண்ணியங்களை அறிவித்தல் (1பேதுரு 2:9).

மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது (மத்.5:16).



வடகிழக்கு மிஷன் இலாக்கா

Rev. A. எட்வின் பிரபாகர்

இயக்குநர், தமிழ் பிரதேச வடகிழக்கு மிஷன் இலாக்கா

பரிபூரண ஜீவன் பத்திரிகை வாசகர்கள் அனைவருக்கும் மிஷன் இலாக்கா மூலம் இயேசு கிறிஸ்துவின் அன்பான வாழ்த்துக்கள். இந்த மாத இதழிலும் தங்களோடு மிஷன் பாரத்தை ஒரு சிறு செய்தியின் மூலம் பகிர்ந்து கொள்வதில் சந்தோஷப்படுகிறேன்.

"பின்பு அவர் அவர்களை நோக்கி நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" (மாற்கு 16:15).

ஆண்டவர் இயேசு கிறிஸ்து பதினொரு அப்போஸ்தலர்களும் போஜன பந்தியிருக்கையில் அவர்களுக்கு தரிசனமாகி பரமேறிப் போவதற்கு முன்பு தன் இருதய பாரத்தை பதினொரு அப்போஸ்தலரோடும் பகிர்ந்து கொண்டார் (லூக்கா 16:14). அந்த அப்போஸ்தலர்கள் அன்றைய உலகில், உலகமெங்கும் சுவிசேஷத்தைக் கொண்டு சென்று ஊழியத்தை நிறைவேற்றினார்கள். நாம் இன்று 2026-ல் வருகையின் காலத்தில், கடைசி சமயத்தில், கொடிய காலத்தில் வாழ்ந்து வருகிறோம். இயேசு கிறிஸ்துவின் இருதய பாரத்தை, அந்த கட்டளையை நிறைவேற்ற வேண்டிய பெரிய உத்தரவாதம் நமக்கு இருக்கிறது. எரேமியா 1:10-ன் படி தேவன் நம்மை ஜாதிகளின் மேலும் இராஜ்யங்களின் மேலும் ஏற்படுத்தி வைத்திருக்கிறார். உலக இராஜ்யங்களுக்கும் உலகத்தில் வாழும் மக்கள் வெவ்வேறு பிரிவினருக்கும் இன்றைய தினம் கொடுக்க வேண்டிய உத்தரவாதத்தை, உக்கிராணத்துவத்தை, பொறுப்பினை நாம் பெற்றிருக்கிறோம், குறிப்பாக நமது பாரத தேசத்தை குறித்த பாரத்தை கர்த்தர் தருவாராக. நமது தேசத்தில் 28 மாநிலங்கள், 8 யூனியன் பிரதேசங்களில் பல பாஷை பேசும் மக்களும், ஒருமுறை கூட சுவிசேஷத்தைக் கேளாத ஏராளமான மக்களினங்களும், நிறைந்ததாய் நம்முடைய தேசம் காணப்படுகிறது. இந்த நற்செய்தி பணியை, வடமாநில மிஷனரி பணியை நிறைவேற்றிட தேவன் காத்திருக்கிறார், நிறைவேற்றிட அழைக்கிறார்.

1.இந்திய தேசத்திற்கு இயேசுவை சுவிசேஷமாய் அறிவிக்க தேவன் தரும் பாரம் பெறுவோமாக!

இந்திய தேசத்திற்காக ஜெபிக்கும் ஒவ்வொருவருக்குள்ளும் தேசத்தை குறித்த பாரத்தையும், சுவிசேஷத்தை அறிவிக்கும் செயலையும், தேவன் நமக்குள் சுமத்துகிறார். ரோமர் 10:1-ல் இஸ்ரவேலரின் இரட்சிப்புக்காக அப்போஸ்தலனாகிய பவுல் ஜெபிக்கும்போது அவர்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என்ற பாரத்தை தேவன் பவுல் அப்போஸ்தலனுடைய இதயத்தில் வைத்தார். ஜெபிக்கும் ஒவ்வொரு சகோதர சகோதரிகளுக்கும் இந்திய மக்கள் இயேசுவை அறிய வேண்டும் என்ற பாரத்தை கொடுத்திருக்கிறார் - அதை உணர்ந்து, அப்பணிக்கு பாரம் பெற்றவர்கள் எப்படி வாழ வேண்டுமோ, செயல்பட வேண்டுமோ, அப்படி வாழவும், செயல்படவும், தேவன் நம்மை தட்டி எழுப்புகிறார். இவ்வுலகில் நம்மொருவருக்கும்

குறைந்த நாட்களே கொடுக்கப்பட்டிருக்கிறது, அதில் இயேசுவுக்காக எதை செய்கிறோமோ அதுவே நிலைத்திருக்கும். அது நாம் மரித்தும் பேசுகிறதாய் இருக்கிறது. நித்தியத்திலும் பலனைத் தரும் வாழ்வாக இருக்கும். இனியும் காலம் தாழ்த்தாது. பாரம் பெற்ற நாம் துடிப்புடன் எழுந்து செயல்பட கிறிஸ்து நம்மை பிரகாசிப்பிக்க செய்ய ஆயத்தமாய் இருக்கிறார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை சார்ந்து இந்திய மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க செயல்படவும், இந்திய மிஷன் பணிகளுடன் நம்மை இணைத்து கொள்ளவும், தாங்கி நிற்கவும் தேவன் கிருபை செய்வாராக.

2.இந்திய தேசத்திற்கு இயேசுவை சுவிசேஷமாய் அறிவிக்க போய் பிரசங்கிப்போமாக!

இயேசு கிறிஸ்துவோடு மூன்றரை ஆண்டுகள் இருந்த அப்போஸ்தலர்கள் மாற்கு 15:16-ல் கட்டளையைப் பெற்றுக்கொண்ட பிறகு முழு உலகத்திற்கும் சுவிசேஷத்தைக் கொண்டு சென்றனர். அப்போஸ்தலர் நடபடிகளில் ஆதி சபை உபத்திரவங்களால் சிதறடிக்கப்பட்டபோது சுற்றியுள்ள கிராமங்கள், பட்டணங்களில் போய் சுவிசேஷத்தைப் பிரசங்கத்தனர். அப்போஸ்தலர் 8:1-ல் எருசலேமில் உள்ள சபைக்கு துன்பம் உண்டானபோது அப்போஸ்தலர்கள் தவிர யூதேயா, சமாரிய தேசங்களில் சிதறுண்டு போய் அப்.8:4-ல் சிதறிபோனவர்கள் எங்கும் போய் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தனர். சுவிசேஷத்தை மக்கள் கேட்டனர், கவனித்தனர், ஏற்றுக்கொண்டனர். சமாரியாவில் உள்ள ஒரு பட்டணத்திலே பிலிப்பு வந்து கிறிஸ்துவைப் பிரசங்கித்தான். அநேகர் ஒருமனப்பட்டு கவனித்தனர். அநேகரிலிருந்த அசுத்த ஆவி மிகுந்த சத்தத்தோடு கூப்பிட்டு. அவர்களை விட்டு புறப்பட்டு சென்றது, விடுவிக்கப்பட்டார்கள். அநேக திமிர்வாதக்காரரும், சப்பாணிகளிலும் இயேசுவின் நாமத்தினால் குணமாக்கப்பட்டார்கள். அந்த பட்டணத்திலே மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று (அப்போஸ்தலர் 8:5-8).

ஆதி அப்போஸ்தலரும், ஆதி சபை விசுவாச மக்களும் செய்த பணியினை இந்திய தேசம் முழுவதும் சென்று அறிவிக்க, பிரசங்கிக்க இயேசு கிறிஸ்து நம்மை அழைக்கிறார். எக்காலங்களிலும் சபைக்கு துன்பம் இருந்தது. இந்தியாவிலுள்ள துன்பங்களை பொருட்படுத்தாமல் நாம் வீறுகொண்டு எழுந்து செயல்பட்டால் இந்திய தேசத்தை சந்தித்து, இரட்சித்து தம்முடையதாய் மாற்ற தேவன் வல்லமையுள்ளவராய் இருக்கிறார். கிராமங்கள் தோறும், பட்டணங்கள் தோறும், அர்ப்பணித்து செல்ல வட மாநிலங்களுக்கும் வருவீர்களா? மாற்கு 16:20-ம் இயேசுவின் கட்டளையை ஏற்றுக்கொண்ட அப்போஸ்தலர்கள் புறப்பட்டுபோய் எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள். தாவீது தனது சங்கீதத்திலும் (51:13)-ல் அவன் உயிர்ப்பிக்கபட்டபோது "பாதகர்களுக்கு உமது வழிகளை உபதேசிப்பேன் பாவிகள் உம்மிடத்தில் மனம் திரும்புவார்கள்" என்று சொன்னது போன்று கிரியைகளை நம்முடைய தேவன் செய்து முடிப்பார்.

3. இந்திய தேசத்திற்கு இயேசுவை சுவிசேஷமாய் அறிவிக்க எழும்பும் நம்மூலம் அடையாளங்களினாலே வசனம் தேவனால் உறுதிப்படுத்தப்படும்!

லூக்கா 16:20 படி அப்போஸ்தலர்கள் எங்கும் புறப்பட்டுபோய் பிரசங்கித்தபோது தேவன் அவர்களுடனே கூட இருந்து கிரியை நடப்பிப்பதோடு, அவர்களினால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார். எக்காலங்களிலும் எந்த தேசங்களிலும் நம்முடைய ஊழியர்களை கொண்டும்,

பிள்ளைகளை கொண்டும் கிரியை நடப்பிக்க அவர் ஜீவிக்கிறவராய் இருக்கிறார். இன்றைக்கும் இந்திய தேசம் எங்கும் அர்ப்பணிப்போடு, பாரத்தோடு, ஜெபத்தோடு, தரிசனத்தோடு நாம் அவருடைய பணியை செய்தால், இந்திய தேசம் முழுவதும் அற்புத அடையாளங்களினால் தம்மை வெளிப்படுத்த இயேசு ஜீவிக்கிறவராய் இருக்கிறார்.

பரிசுத்த ஆவியாகிய தேவனும் நம்மை பிரகாசிக்கச் செய்து இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வியாதிகள் குணமடையவும், பிசாசுகள் துரத்தப்படவும், சர்ப்பங்களை எடுக்கவும், சகல மக்களும் சொஸ்தமடையவும், பயன்படுத்தவும் தேவன் வல்லமையுள்ளவராய் (மாற்கு 16,17,18) இருக்கிறார். இந்திய தேசம் முழுவதும் பின்மாரி மழையை பெய்யப்பண்ணி இயேசுவே தெய்வம் என்று சகல மக்களும் அறியக்கூடிய வகையில் கிரியை நடப்பித்து, தம்முடைய வல்லமையை நிலைநாட்டி, ஆத்துமாக்களை இரட்சித்து, அற்புத அடையாளங்களினால் வசனத்தை உறுதிப்படுத்தி, நம் மூலம் சபையை ஸ்தாபித்திட இயேசு ஜீவிக்கிறார். நமது தலைமுறையில் இந்திய மக்கள் இயேசுவைக் காண்பார்கள். வடமாநிலங்கள் சுவிசேஷ மயமாக்கப்படும். பட்டணங்கள், கிராமங்கள் இயேசுவினுடையதாய் மாறும். அல்லேலூயா!!!

- சுவிசேஷத்தை அறிவிக்க பாரம் பெறுவோமாக!
- சுவிசேஷத்தைப் போய் அறிவிப்போமாக!
- சுவிசேஷத்தை நம் மூலம் தேவன் உறுதிப்படுத்துவாராக!

ஜெபியுங்கள்! ஜெபியுங்கள்! ஜெபியுங்கள்!



1. தமிழ் பிரதேசம் தாங்கும் 675 மிஷனரி குடும்பங்களுக்காக.
2. வடமாநிலங்களில் இருக்கும் உபத்திரவங்கள் தேவனால் பரிகரிக்கப்பட.
3. பொய் வழக்குகளையும், சிறைச்சாலை கட்டுகளைச் சந்தித்திருக்கிற மிஷனரிகள் அதிலிருந்து விடுவிக்கப்பட.
4. நம்முடைய மிஷனரிகள் மூலம் தேவன் தம்மை வல்லமையாய் நிரூபிக்க.
5. வடமாநில சபைகள், ஊழியங்கள் தேவகிருபையை பெற்று வளர்ந்து பெருக.
6. நவம்பர் 8 ஞாயிறு மிஷன் ஞாயிறாக அனைத்து தமிழ் பிரதேச சபைகளும் ஆசரிக்க, ஜெபிக்க.
7. எல்லா சபைகளும், விசுவாசிகளும் கிறிஸ்துமஸ் வெகுமதி கவரினை பெற்று உற்சாகமாய் திரும்ப சபையில் படைக்க.
8. எம்.எம் 33-எழுப்புதலின் பத்தாண்டு திட்டத்தில் புதிய 600 மிஷனரிகள் அனுப்ப, இந்தியாவில் சந்திக்கப்படாத மக்களினடத்திற்கு அனுப்ப, தேவன் உதவி செய்ய, மிஷனரிகளை தேவன் எழுப்புவாராக.
9. நமது சபைகளிலிருந்து போதகர்கள், விசுவாசிகள் செல்லும் ஜெபநடைப்பயணம் பாதுகாப்பாய், ஆசீர்வாதமாய் அமைய.
10. நமது மிஷன் ஊழியர்கள் மூலம் மிகப்பெரிய எழுப்புதல் தேசத்தில் உண்டாக, வரும் ஆண்டிலும் இந்தியாவின் புதிய மொழிகளில் வேதாகமம் வெளிவர.

எல்க்கானா

அவசர உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் நமக்கு மற்றவர்களின் வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும் ஒரு கடினமான நிலையை, சூழ்நிலையை கவனித்து விசாரிக்க நேரம் கிடைப்பதில்லை. எனக்கே கவலை, நான் எப்படி கவலையில் உள்ளவரை விசாரிக்க முடியும்? என்று எண்ணாதீர்கள். ஆனால் வாழ்க்கை என்னும் ஓட்டத்தில் நம்மோடு இருப்பவர்களை குறித்த கரிசனையும் விசாரிப்பும் நமக்கு தேவை.

எல்க்கானாவின் மனைவியாகிய அன்னாளிள் வாழ்க்கையில் குழந்தை இல்லை (1சாமு.1:25). பெனினாளோ அன்னாளை மிகவும் துக்கப்படுத்தி மனமடிவாக்குவதால், அன்னாள் சாப்பிடாமல் அழுதுகொண்டே இருப்பாள். இதை குறிப்பால் அறிந்த எல்க்கானா அன்னாளைப் பார்த்து, அன்னாளே ஏன் அழுகிறாய்? ஏன் சாப்பிடாதிருக்கிறாய்? ஏன் சஞ்சலப்படுகிறாய்? பத்துக் குமாரனைப் பார்க்கிலும் நான் உனக்கு அதிகமல்லவா என்று அவளை விசாரித்து ஆறுதல் செய்தான் (1சாமு.1:8).

எல்க்கானாவின் வார்த்தைகள், அன்னாள் தன் குறைவை எண்ணக்கூடாது, 10 குமாரர் கொடுக்கும் எல்லா அன்பு, அந்தஸ்து எல்லாவற்றையும்விட, தான் அவளுக்கு அதிகம் என்று அவளது குறைவை நிறைவாகப் பார்த்தான். அவனது வார்த்தைகளால் ஆறுதல் அடைந்த அன்னாள், விண்ணப்பம் பண்ண ஆலயத்துக்கு சென்றாள் (1சாமு.1:9).

மனைவியின் சுகநலனை, அவளால் முடியாத தன்மையை அவள் எதிர்பார்க்கும் காரியத்தை பார்த்து, கேட்டு, புரிந்துகொண்டு, விசாரிக்க வேண்டும். அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால் உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள் என்று வசனத்தை சொல்லிவிட்டு, நீங்கள் விசாரிக்காமல் இருந்துவிட்டால் அவள் ஆறுதல் அடைய முடியாது.

தேவ ஊழியர்கள் உங்கள் சுக துக்கங்களை விசாரிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிற நீங்கள் தேவ ஊழியர்களை விசாரித்ததுண்டா? அவர்களின் ஊழிய திட்டங்களை அறிந்து அவர்களை ஜெபத்தில் தாங்குங்கள்.

இயேசு உபதேசித்து சொன்ன, மத்தேயு 25:34-40 ஆகிய வசனங்களில் "அப்பொழுது ராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து பசியாயிருந்தேன் எனக்குப் போஜனங்கொடுத்தீர்கள். தாகமாயிருந்தேன், என் தாகதை தீர்த்தீர்கள், அந்நியனாயிருந்தேன், என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள், வஸ்திரமில்லா திருந்தேன். எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள், வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள், காவலிலிருந்தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள் என்பார்... மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன் என்பார்" என்றிருக்கிறதே.

இன்றைக்கும் நம்முடைய விசாரிப்பு மற்றவர்களுக்கு ஆறுதலாக, அவர்களை தேவ சமுகத்திற்கு நேராக திருப்புவதாய் அமைவதாக. உங்கள் விசாரிப்பு உங்கள் குடும்பத்திலிருந்து துவங்கட்டும். முதலாவது உங்கள் மனைவி, பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள், அயலகத்தார்கள், ஏழைகள், திக்கற்ற பிள்ளைகள் என்று உங்கள் விசாரிப்பு வட்டம் நீண்டு கொண்டே செல்லட்டும். நீங்கள் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாகயிருப்பீர்கள்.

Rev.Dr.J. சாமுவேல் ஜெபராஜ்
தலைவர், தமிழ் பிரதேச ஆண்கள் ஐக்கியம்



இஸ்லாமியர்கள் இயேசு கிறிஸ்துவை பற்றி சொல்லும் நான்கு தவறான காரியங்கள்

Rev. ஜேக்கப் இஸ்ரேல்
இயக்குநர், இஸ்லாமியர் ஊழியங்கள்

- இயேசு ஒரு நபி (தீர்க்கதரிசி) மட்டும் தான்.
- இயேசு ஒரு மனிதன் தான் என்பதற்கு வேதத்தில் வசனங்கள் உள்ளது.
- இயேசு எங்குமே தன்னை தேவன் என்று சொல்லவில்லை.
- இயேசு தேவன் என்றால் ஏன் தன்னை மனுஷகுமாரன் என்று சொன்னார்.

கடந்த பகுதியில் முதல் இரண்டு கேள்விகளை தியானித்தோம். மீதமுள்ள இரண்டு கேள்விகளை இந்த பகுதியில் தியானிப்போம்.

3). இயேசு எங்குமே தன்னை தேவன் என்று சொல்லவில்லை

பதில்:இயேசுவே அநேக இடங்களில் தன்னை தேவனாக வெளிப்படுத்தி யிருக்கிறார்.

a). மத்.12:6 "தேவாலயத்திலும் பெரியவர் இங்கே இருக்கிறார்". இந்த வசனத்தில் சொன்னது, இயேசு தன்னை தான் சொன்னார் என்பது வேதத்தை வாசிக்கும்போது, தெளிவாக தெரியும். தேவாலயத்தை விட, அதில் வாசல் செய்யும் தேவன் தான் பெரியவர் என்று தன்னை குமரனாகிய தேவனாக வெளிப்படுத்தினார்.

b). மத். 22:41-45 உள்ள வசனங்களை நன்றாக கவனியுங்கள் :

(வசனம் 42) கிறிஸ்துவைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள். அவர் யாருடைய குமாரன்? என்று கேட்டார். அவர்கள் தாவீதின் குமாரன் என்றார்கள். (வசனம் 43) அதற்கு அவர் அப்படியானால் தாவீது பரிசுத்த ஆவியினாலே அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்கிறது எப்படி? (வசனம் 45) **தாவீது அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்க, அவனுக்கு அவர் குமாரனாயிருப்பது எப்படி?** என்றார். இதில் இயேசு தன்னை தேவனாக வெளிப்படுத்தியது தெளிவாக தெரிகிறதல்லவா.

தாவீதின் குமாரன் என்றார்கள். அதற்கு இயேசு சொல்லுகிறார். தாவீது அவரை (இயேசுவை), பரிசுத்த ஆவியினாலே ஆண்டவர் என்று சொல்லியிருக்க, அவனுக்கு அவர் குமாரனாயிருப்பது எப்படி? என்றார். அவர்கள் ஆச்சரியப் பட்டார்கள். தாவீது எந்த இடத்தில் சொன்னார் என்றால் **சங்கீதம் 110:1** வாசியுங்கள். **"கர்த்தர் என் ஆண்டவரை நோக்கி"** இந்த இடத்தில் கர்த்தர் என்பது பிதாவாகிய தேவனைக் குறிக்கும். ஆண்டவர் என்பது குமாரனாகிய இயேசுவைக் குறிக்கும்.

மூலக்கைபிரதியில்- "JEHOVAH SAID UNTO MY JEHOVAH" அதாவது "யெகோவா என் யெகோவாவை" நோக்கி என்று இருக்கிறது. இந்த இடத்தில் இயேசு தன்னை தேவன் என்று சொல்கிறார். இது போன்று அநேக ஆதாரமான வசனங்களை கொடுக்க முடியும்.

இயேசு ஏன் "தேவன்" என்ற வார்த்தையை பயன்படுத்தவில்லை என்று பார்ப்போம்:

அந்நாட்களில் வாழ்ந்த யூதர்களிடம், ஒருவர் தன்னை பரலோகத்தின் தேவன் என்று சொல்ல வேண்டுமானால் அந்த நபர் **"யெகோவா" (இருக்கிறவராக இருக்கிறேன்)** என்ற நாமத்தை பயன்படுத்தினால் மட்டுமே, அந்த நபர் தன்னை **"சர்வ வல்லமையுள்ள பரலோகத்தின் தேவன்"** என்று சொல்லுகிறார் என்று யூதர்கள் புரிந்து கொள்வார்கள். ஏனென்றால், கர்த்தர் மோசேக்கு தன்னை யெகோவா என்ற நாமத்தின் மூலமாக தான் வெளிப்படுத்தினார். மேலும் **யாத்.3:14** வசனத்தை வாசிக்கையில் தேவன் தன்னை "இருக்கிறேன்" என்பவராக வெளிப்படுத்தியதை பார்க்க முடியும். ஆகவே தான் இயேசுவும் யோவான் 8:58 வசனத்தில் **"இருக்கிறேன்"** என்று வார்த்தையின் மூலம் தன்னை தேவனாக வெளிப்படுத்தினார். **யோவான் 8:58** ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் **"இருக்கிறேன்"**. இந்த வசனம் மூலம் இயேசு யூத மக்களிடம் தன்னை தேவன் (யெகோவா) என்று சொல்லியது தெளிவு. இந்த அர்த்தங்கள் யூதர்களுக்கு மிக நன்றாகவே தெரியும். ஆகவே தான் அடுத்த வசனத்தில் இயேசு தன்னை **"யெகோவா"** என்று சொன்னதற்காக **(யோவான் 8:59)** கற்களை எறியும்படி எடுத்தார்கள். இன்னும் அநேக இடங்களில் இயேசு **"இருக்கிறேன்"** என்ற நாமத்தின் மூலம் தன்னை தேவனாக வெளிப்படுத்தினார்.

4). இயேசு தன்னை "மனுஷ குமாரன்" என்று சொன்னதற்கான காரணம்:

தானி.7:13... மனுஷ குமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார் **(வச.14).** அவருடைய ராஜ்யம் அழியாததுமாயிருக்கும்.

மேலே பார்த்த வசனங்களின் சுருக்கம் என்னவென்றால், யெகோவா தேவன், தானியேல் தீர்க்கதரிசிக்கு இயேசு கிறிஸ்துவைக் குறித்து தீர்க்கதரிசனம் உரைத்த காரியம் ஆகும். **இந்த வசனத்தில் வரும் மனுஷ குமாரன் என்பவர் தேவனாயிருக்கிறார் என்பதை, யெகோவா தேவனே, தானியேல் தீர்க்கதரிசிக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். தானி.7:13.14** வசனங்களை முழுமையாய் வாசிக்கும்போது இந்த காரியம் தெளிவாகப் புரியும். ஆகவே தான், இயேசுவும் அநேக இடங்களில் தன்னை மனுஷ குமாரன் என்று சொல்வதின் மூலமாக, தானியேல் தீர்க்கதரிசிக்கு தரிசனமாக காண்பிக்கப்பட்டவர், இவர்தான் (இயேசு) என்பதை வெளிப்படுத்தினார். **உதாரணமாக (மாற்கு 14:61-62).**

(வச 61)... நீ ஸ்தோத்தரிக்கப்பட்ட தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா... **(வச 62)** அதற்கு இயேசு "நான் அவர்தான்" மனுஷ குமாரன் சர்வ வல்லவரின் வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும், வானத்தில் மேகங்கள் மேல் வருவதையும் நீங்கள் காண்பீர்கள் என்றார்.

மாற்கு 14:62 வசனத்தை வாசிக்கும்போது, இயேசு தாம்தான் தானியேல் தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்ட **(தானி.7:13,14)** தேவன் என்று பிரதான ஆசாரியனுக்கு உத்தரவுக் கொடுப்பதை பார்க்க முடியும். பிரதான ஆசாரியன் பழைய ஏற்பாட்டையும், குறிப்பாக தானியேலின் தீர்க்கதரிசனங்களையும் நன்கு அறிந்திருந்தபடியால்தான், இயேசு இவ்வாறாக **மாற்கு 14:62** பேசியதை கேட்டவுடன், இயேசு தன்னை தேவன் என்று சொல்லுகிறார் என்பதை புரிந்து கொண்டான்.

அதனால்தான், இயேசு தேவனுக்கு விரோதமாக தேவ தூதஷணம் பேசியதாக எண்ணி தன்னுடைய வஸ்திரங்களை கிழித்து கொண்டான் **(வசனம்**

மாற்கு 14:63). ஆக இயேசு தன்னை மனுஷ குமாரன் என்று ஏன் சொன்னார் என்பது இப்பொழுது புரிந்திருக்கும். இறுதியாக யெகோவா தேவனால் மட்டுமே செய்ய முடியும். காரியங்களை இயேசுவும் செய்திருப்பதை இப்பொழுது பார்த்து முடிப்போம்.

முதலாவது : வணக்கத்துக்குரியவர் தேவன் ஒருவரே. அதனால்தான் பழைய ஏற்பாடு முதல் புதிய ஏற்பாடு வரை தீர்க்கதரிசிகளானாலும் சரி, தேவனுடைய ஊழியகாரரானாலும் சரி, மற்றவர்கள் தங்களை யெகோவா தேவனுக்கு நிகராக எண்ணி வணங்குகிற தருணங்களில், அவர்கள் அந்த வணக்கங்களை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் இயேசு அநேக இடங்களில் தன்னை மற்றவர்கள் வணங்கும்போது, அவர் அவர்களை தடை செய்யவில்லை. மாறாக அவர் **(இயேசு)** வணக்கத்தை ஏற்றுக்கொண்டார். வசன ஆதாரங்கள்: **மத்.8:2; 14:33; லூக்கா 24:52; யோ.9:38; எபி.1:6.** இதன் மூலம் இயேசு தேவன் என்பது தெளிவாக தெரிகிறது.

இரண்டாவது : பரிசுத்த வேதாகமம், தேவன் ஒருவருக்கே பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் உண்டு என்று அநேக இடங்களில் சொல்லியிருக்கிறது. வசன ஆதாரங்கள்: **ஏசா.43:25; அப்.8:22; 1இரா. 8:39.** இப்பொழுது இயேசு மற்றவர்களின் பாவங்களை மன்னிப்பதை புதிய ஏற்பாட்டில் **மத்.9:2-6** வசனங்களில் பார்ப்போம்.

(வச 2) ...திடன்கொள். உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது. **(வச 3)** ...இவன் தேவதூஷணம் சொல்லுகிறான். **(வச 4)** இயேசு அவர்கள் நினைவுகளை அறிந்து... **(வச 5)** உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்று சொல்வதோ, எழுந்து நடவென்று சொல்வதோ, எது எளிது? **(வச.6)** பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறிய வேண்டும்.

மத்.9:2 வசனத்தில், இயேசு திமிர்வாதக்காரனின் பாவத்தை மன்னித்து தன்னை தேவனாக வெளிப்படுத்தினார். இதனை சரியாக புரிந்து கொண்டதால்தான், இயேசு தேவதூஷணம் பேசியதாக அங்கிருந்தவர்கள் நினைத்தார்கள். இயேசு அவர்களின் நினைவுகளை அறிந்து, தான் **(இயேசு)** தேவனாய் இருப்பதால் தனக்கு அந்த அதிகாரம் உண்டு என்பதை வெளிப்படுத்தும் விதத்தில் பேசுகிறதை அதை தொடர்ந்து வரும் வசனங்களில் பார்க்க முடியும். மேலும் மன்னிப்பதோடு மட்டும் அல்லாமல் இயேசு அந்த இடத்தில் ஒரு அற்புதத்தையும் செய்து தான் தேவன் என்பதை உறுதி செய்கிறதை பார்க்க முடியும். ஆக இயேசு தேவனாக இருப்பது சத்தியமான ஒன்று.

அவர் (இயேசு) ஒருவரே தேவனாகிய கர்த்தர்!!!
எல்லா புகழும் இறைவனாகிய இயேசு ஒருவருக்கே!!!

தாங்கள் பரிபூரண ஜீவன் பத்திரிக்கை மூலமாக ஆசீர்வதிக்கப்பட்டிருந்தால் உங்கள் சாட்சிகளை வாட்ஸ்அப் மூலமாகவோ, தபால் மூலமாகவோ தெரிவிக்கலாம். மேலும் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு பயனுள்ள செய்திகள், துணுக்குகள் ஆகியவற்றையும் அனுப்பலாம்.

நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி

Rev. JERRY DANIEL
303, C Block, Roshan Residency,
6, VOC Road, Cantonment, TRICHY-620 001
Cell : 94434 15484



தமிழ்பிரதேச மத்திய வாலிபர் ஊழியம்

Rev. S. கோபிநாத்
President, Christ's Ambassadors

"GLORIOUS VICTORY"

மகத்தான வெற்றி

மீதியானியர்களின் ஒடுக்குமுறைக்குப் பயந்து, திராட்சை ஆலையில் கோதுமையை ஒளித்து வைத்துப் போரடித்துக் கொண்டிருந்த ஒரு சாதாரண, பயந்த சுபாவமுள்ள வாலிபனாகிய கிதியோனை தேவன் தலைவனாக தெரிந்துகொண்டு, அவனோடிருந்து மகத்தான வெற்றியைத் தந்ததை நாம் தியானித்துக் கொண்டு வருகிறோம்.

நம்முடைய வாழ்விலும் மகத்தான, உயர்ந்த வெற்றியைப்பெற (Glorious Victory) நாம் என்ன செய்ய வேண்டும் என்று கிதியோன் வாழ்வில் இருந்து மேலும் சில காரியங்களை நாம் கற்றுக் கொள்வோமாக!

1. YEARN FOR GOD'S PRESENCE

தேவ பிரசன்னத்தை வாஞ்சியுங்கள்

மீதியானியர்களின் படை வெட்டுக்கிளிகளைப்போல எண்ணற்றதாக இருந்தது. ஆனால் தேவன் அந்தப் பெருங்கூட்டத்தை, தன் குடும்பம் எளியது, தான் சிறியவன் என்று தன் பலவீனங்களைச் சொன்ன கிதியோனைக் கொண்டு மிக எளிதாக பெரிய வெற்றியைத் தேவன் கட்டளையிட்டார். தனது சொந்த பலத்தை, திறமையைப் பார்த்துக் கலங்கின அவனை தேவன், "உனக்குத் தகுதி இருக்கிறதா?" என்று கேட்கவில்லை. மாறாக நியாயாதிபதிகள் 6:16ன்படி 'நான் உன்னோடு இருப்பேன்' என்று வாக்குக்கொடுத்ததுமல்லாமல், கர்த்தர் அவனோடிருந்து அவனை பயன்படுத்தினார். நமது பலவீனங்களின் மத்தியில் தேவனுடைய பிரசன்னம் மட்டுமே நமக்கு வெற்றியைத் தரும். தேவ பிரசன்னத்தை வாஞ்சித்து அவரிடம் உங்களை அர்ப்பணிக்கும்போது உங்கள் கண் முன்னால் மலையாகத் தெரியும் பிரச்சனைகளையும், சவால்களையும் தேவன் மிக எளிதாக மாற்றி விடுவார். பயந்து போனவர்களாக அல்ல, பராக்கிரமசாலிகளாய் பிரச்சனைகளை எளிதாய் ஜெயிக்க தேவ பிரசன்னத்தை வாஞ்சியுங்கள். 1 யோவான் 4:4-ன் படி உலகத்திருக்கிறவனிலும் உங்களிருக்கிறவர் பெரியவர்.

Expect great things from God
Attempt great things for God - William Carey.

2. BREAK DOWN THE HIDDEN ALTARS

மறைக்கப்பட்ட பலிபீடங்களை தகர்த்தல்

தேவன் கிதியோனைக் கொண்டு இஸ்ரவேல் தேசத்தை இரட்சிக்க விரும்பினார். ஆனால் அதற்கு முன்பாக கிதியோன் தன் வீட்டிலுள்ள அந்நிய தெய்வ வழிபாட்டையும், பாவத்தையும் ஒழிக்க வேண்டும் என்று தேவன்

விரும்பினார். கிதியோன் பலிபீடத்தை உடைத்த பின்புதான் தேவனுடைய ஆவி அவன்மேல் இறங்கி, அவனுக்குப் பெரிய வெற்றியைத் தந்தார் (நியாயாதிபதிகள் 6:25-29). விக்கிரகம் என்பது வெறும் கல்லோ, மரமோ அல்ல. தேவனுக்கு கொடுக்க வேண்டிய முதலிடத்தை நம் வாழ்க்கையில் எது ஆக்கிரமித்திருக்கிறதோ அதுவே விக்கிரகம். தேவன் உங்களை ஒரு பெரிய காரியத்திற்குப் பயன்-படுத்துவதற்கு முன் உலக ஆசை, பண ஆசை, பெருமை, தவறான பழக்கங்கள் போன்ற தேவன் விரும்பாத நம் இருதயத்தில் இருக்கும் சுயநல பலிபீடங்களை நாம் அகற்ற வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். யோசுவா 3:5 உங்களைப் பரிசுத்தம் பண்ணிக்கொள்ளுங்கள்; நாளைக்குக் கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வார். எனவே நாம் நம்முடைய வாழ்வையும், நம்முடைய குடும்பத்தையும் தேவனுக்குப் பிரியமாய் மாற்றினால் வெற்றி நிச்சயம்.

3. BE FILLED WITH HOLY SPIRIT

தேவ ஆவியால் நிரப்பப்படுதல்

மூல பாஷையாகிய எபிரெய மொழியில் "ஆவியானவர் இறங்கினார்" என்பதற்கு ஆவியானவர் கிதியோனை தம்மால் தரித்துக்கொண்டார் என்று பொருள். (The Spirit Clothed Himself with Gideon). நாம் தேவனுடைய காரியங்களைச் செய்யும்போது பரிசுத்த ஆவியானவர் நம்மை ஒரு கருவியாக அணிந்துகொண்டு கிரியை செய்கிறார். எனவே தான் தன்னை மிகவும் சிறியவனாகக் கருதிய கிதியோனின் மேல் தேவ ஆவி வந்தவுடன் அவனுக்குள் இருந்த பயம் நீங்கி, எதிரிகளை எதிர்க்கும் மகா தைரியம் வந்தது.

கிதியோன் ஒரு சாதாரண, பயந்த வாலிபன். ஆனால் தேவனுடைய ஆவி அவன்மேல் வந்தபோது அவன் ஒரு பராக்கிரமசாலியாக மாறினான். ஒரு மனிதன் தேவனுடைய ஆவியால் நிரப்பப்படும்போது அவனுக்குள் இருக்கும் உலகப் பிரகாரமான பயங்கள், கவலைகள் மற்றும் தாழ்வு மனப்பான்மை நீங்கி தேவ பெலன் பெருகுகிறது. தேவன் தகுதியானவர்களை அழைப்பதில்லை மாறாக அவர் அழைத்தவர்களைத் தகுதிப்படுத்துகிறார். நாம் பலவீனமானவர்களாயிருந்தாலும் பரிசுத்த ஆவியானவரின் பெலத்தால் நாம் நிரப்பப்படும்போது நம்மைக் கொண்டு அசாதாரணமான காரியங்களை தேவன் நடப்பிப்பார்.

நம் சொந்த பலத்தால், திறமையால் எதுவும் செய்ய முடியாது. ஆனால் ஆவியானவரின் பலத்தால் நிரப்பப்படும்போது நம்மால் சாதிக்க முடியும். பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் (சகரியா 4:6).

With the power of God within us.

We need never fear the power around us.

4. SOUNDING THE TRUMPET OF GLORIOUS VICTORY

மகத்தான வெற்றியின் எக்காளத்தை முழங்குங்கள்

அந்நிய பலிபீடத்தைத் தகர்த்து, தேவ பிரசன்னத்தை உணர்ந்து கர்த்தருக்கு பலிபீடம் கட்டிய கிதியோனை அழிக்க அவனது சொந்த ஜனங்களே திரண்டு வந்தனர். கர்த்தருடைய ஆவியால் நிரப்பப்பட்ட கிதியோன் எக்காளம் ஊதியபோது எவர்கள் எதிராக வந்தார்களோ, அவர்களே அவனுக்குப் பின்னால் ஆதரவாய் நின்றார்கள் (நியாயாதிபதிகள் 6:34).

தேவன் ஒரு மனிதனை அபிஷேகம் செய்யும்போது மற்றவர்களை வழிநடத்தக்கூடிய அதிகாரத்தையும், பெலனையும் தருகிறார்.

எண்ணாகமம் 10:8,9-ன்படி நம்மைத் துன்பப்படுத்துகிற சத்துருவுக்கு விரோதமாக யுத்தத்துக்குப் போகும்போது, பூரிகைகளை நாம் முழங்க வேண்டும். அப்பொழுது நாம் கர்த்தருடைய சமுகத்தில் நினைவு கூறப்பட்டு பகைஞருக்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவோம்.

நமக்கு வரும் ஆபத்துக்கள், சோதனைகளில் சிக்கித் தவிக்கும்போது, நாம் அவரைத் துதிக்கும்போது, அவரை நோக்கிக் கூப்பிடும்போது அவர் நம்மை நினைவு கூர்ந்து நமது எதிரிகளிடமிருந்து நமக்கு விடுதலை தருவார். நமது முழங்கால் ஜெபம், துதியானது எக்காள சத்தத்திற்கு ஒப்பானது. நமது ஜெபம், துதி நமக்கு வெற்றியைத் தேடித் தரும். பலங்கொண்டு திடமனதாயிருப்போம்! பாரதத்தை இயேசுவுக்காய் சுதந்தரிப்போம்!!

Never forget Prayer is the most Powerful Force.

வாலிபர்களே! பராக்கிரமசாலிகளே!! தேவன் தனது திட்டத்திற்காக உங்களைத் தெரிந்தெடுத்திருக்கிறார். எனவே, உங்களது சுய பெலத்தை நம்பாமல், பரிசுத்த ஆவியினால் நிறைந்து, எக்காளம் ஊதி, சுவிசேஷத்தை அறிவித்து, சாட்சியாய் நின்று தைரியமாய் செயல்படும்போது உங்களைக் கொண்டு அரிதான, மகத்துவமான வெற்றியைத் தேவன் தந்தருளுவாராக!.

ஜெபம்பண்ணுங்கள்

அதிகாலையில் ஜெபம்பண்ணுங்கள்	மாற்கு 1:35.
அந்தரங்கத்தில் ஜெபம்பண்ணுங்கள்	மத்தேயு 6:6.
இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்	அப். 6:4; எபே. 1:16; கொலோ. 4:2; 1தெச. 1:4; 5:17.
இரவும் பகலும் ஜெபம்பண்ணுங்கள்	லூக்கா 2:37;6:12.
உபவாசித்து ஜெபம்பண்ணுங்கள்	அப்போஸ்தலர் 13:3.
உறுதியாய் ஜெபம்பண்ணுங்கள்	அப்போஸ்தலர் 2:42; ரோமர் 12:12.
ஊக்கமாய் ஜெபம்பண்ணுங்கள்	லூக்கா 22:44; அப். 12:5; யாக். 5:16.
எப்பொழுதும் ஜெபம்பண்ணுங்கள்	அப்போஸ்தலர் 10:2.
எல்லா இடங்களிலும் ஜெபம்பண்ணுங்கள்	1 தீமோத்தேயு 2:8.
எல்லாருக்காகவும் ஜெபம்பண்ணுங்கள்	1 தீமோத்தேயு 2:1.
ஒருமனமாய் ஜெபம்பண்ணுங்கள்	அப்போஸ்தலர் 1:14.
கண்ணீரோடு ஜெபம்பண்ணுங்கள்	எபிரெயர் 5:7.
கருத்தாய் ஜெபம்பண்ணுங்கள்	யாக்கோபு 5:17.
செம்மையாய் ஜெபம்பண்ணுங்கள்	நீதிமொழிகள் 15:8.
சோர்ந்துபோகாமல் ஜெபம்பண்ணுங்கள்	லூக்கா 18:1.
தனிமையாய் ஜெபம்பண்ணுங்கள்	2 நாளாகமம் 7:14.
விசுவாசமாய் ஜெபம்பண்ணுங்கள்	மத்தேயு 21:22.
விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்	மத்தேயு 26:41; 13:13; 2 தீமோ. 1:3.
ஸ்தோத்திரத்தோடு ஜெபம்பண்ணுங்கள்	பிலிப்பியர் 4:6.
ஜாக்கிரதையாய் ஜெபம்பண்ணுங்கள்	1 பேதுரு 4:7.



அக்கரைக்குப் போவோம் வாருங்கள்

Rev.R.தாசையா
தேனி மண்டல தலைமைப் போதகர்

மத்தேயு 14:22 அக்கரைக்குப் போங்கள் என்று இயேசு சீஷர்களை துரிதப்படுத்தினார்.

ஆண்டவராகிய இயேசு இந்த உலகில் இருக்கும்போது ஒரு கரையிலிருந்து மறுகரைக்கு துரிதப்படுத்தினார். இந்த வாழ்க்கை பயணம் நாம் அக்கரை நோக்கி போகும் பயணம். அது பரலோகம் என்கிற அக்கரை (பிலிப்பியர் 3:20). இந்த உலகில் நாம் பிறந்திருக்கிறோம். ஒருநாள் மரணத்தை சந்திப்போம். நாம் எந்த பயணம் செய்து கொண்டிருக்கிறோம். இந்த உலகில் இருக்கும்போது அநேகர் அக்கரை சென்றதாக வாசிக்கிறோம். நீங்கள் அக்கரை செல்ல ஆயத்தமா?

எபிரெயர் 6:4,5,6 பரம ஈவை ருசிபார்த்த ஒருசிலர் பின்வாங்கிப் போய்விட்டார்கள் என்று வாசிக்கிறோம். **தேவனுடைய நல்வார்த்தை, இனிவரும் உலகத்தின் பலன்கள், பரம ஈவு, பிரகாசம்** இதை எல்லாம் பெற்றும் அவர்கள் போகவில்லை.

அக்கரை நரகமாகவோ, மோட்சமாகவோ இருக்கலாம். உங்களின் அக்கரை மோட்சமாக இருக்க வேண்டும். நமது இலக்கு அக்கரையாகிய பரலோகமாக இருக்க வேண்டும்.

இஸ்ரவேலர் 12 கோத்திரத்தார் எகிப்தில் இருந்து கானானுக்கு பயணம் செய்தார்கள். மன்னா, தண்ணீர், காடை எல்லாம் தந்தார். அவர்கள் இலக்கு அக்கரை என்ற கானான். ஆனால் யோர்தானுக்கு இக்கரை வந்தவுடன் செழிப்பை கண்டு நின்றுவிட்டார்கள். (மனாசே, காத், ரூபன்), எண்ணாகமம் 32:1,2,5 இந்த மார்க்கத்தில் வந்தபின் உனக்கு எல்லாம் தருவார். ஆனால் இது நிரந்தரம் என்று எண்ணக்கூடாது. (ரூபன், மனாசே, காத்) 1 கொரிந்தியர் 15:19 இம்மைக்காக நாம் வாழ அழைக்கப்படவில்லை. இவர்கள் இவ்வளவு தூரம் வந்து தங்கள் விசுவாசத்தை விட்டு விட்டார்கள். **அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்தபின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப் பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும் (2 பேதுரு 2:21).** இக்கரையில் நின்றுவிட்ட ரூபன், மனாசே, காத் புத்திரரை யோசுவா கடிந்து கொண்டார் (யோசுவா 1:12;4:12).

கிறிஸ்தவ வாழ்வு ஓர் விசுவாச பயணம். (நீதிமொழிகள் 30:19) கப்பலுக்கு வழி-கடல், கழுகுக்கு வழி-வானம், பாம்புக்கு வழி-கன்மலை, உங்களில் எத்தனை பேருக்கு அக்கரை போக ஆசை (நாம் என்ன நினைக்கிறோம்? ஒரு வேலை, திருமணம், சொந்த வீடு இதற்காக பின்பற்றாதே) இந்த மார்க்கத்தில் வந்தபின் உனக்கு தேவையான எல்லாவற்றையும் தேவன் தருவார்.

- ❖ நீ ஆபிரகாமாய் இருந்தால் சீமானாக மாற முடியும்.
- ❖ நீ ஈசாக்காய் இருந்தால் 100 மடங்கு ஆசீர்வாதங்கள் உண்டு.
- ❖ நீ ரெபெக்காளாய் இருந்தால் கோடி கோடியாக ஆசீர்வதிக்கபட முடியும்.

இந்த உலக வாழ்வில் நாம் நீதிமானாக இருக்க வேண்டும். ஆனால் இந்த கரையில் இதை அனுபவிக்க மாத்திரம் அல்ல. அக்கரைக்குப் போக வேண்டும் (2 சாமுவேல் 19:17,18). யோர்தான் என்ன கரைபுரண்டு ஓடினாலும் உன்னை அக்கரைக்கு கொண்டு போக தேவனிடம் ஒரு வழி உண்டு.

அக்கரைக்கு போக வழி

மத்தேயு 14:22 அவன் படகில் போக வேண்டும். 1 தீமோத்தேயு 1:19 விசுவாசமாகிய கப்பல். இந்த மார்க்கத்தில் கரையேறி அக்கரை செல்ல நமக்கு விசுவாசம் தேவை. இன்று விசுவாசம் இல்லாமலே அக்கரைக்குப் போகலாம் என்று நினைக்கிறார்கள். கடைசி காலத்தில் விசுவாச துரோகம் ஏற்படும். உங்களுக்குள் விசுவாசம் இருக்கிறதா? அதை எப்படி அறிவது? எல்லாவற்றிலும் உங்களை சரிப்படுத்த உங்களுக்கு அறிவு இருக்கிறது. உங்களுக்கு விசுவாசம் இருக்கிறதா? 2 தெசலோனிக்கேயர் 3:2 விசுவாசம் எல்லாரிடத்திலும் இல்லையே. எனவே இயேசு (லூக்கா 18:25) உங்கள் விசுவாசம் எங்கே? என்று கேட்கிறார்.

உங்கள் விசுவாசத்தை சோதித்து பாருங்கள். தோமாவை இயேசு அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார். பேதுரு தண்ணீரில் நடந்தபோது அற்பவிசுவாசியே என்றார். அவிசுவாசம் யாரிடத்தில் இருந்தாலும் அவர்களை தேவன் அவிசுவாசியாயிராதே என்றார். 2 கொரிந்தியர் 13:5 தேவன் எதிர்பார்ப்பது விசுவாசம். விசுவாசம் இல்லையென்றால் ஒருவரும் பரலோகம் செல்ல முடியாது. உங்கள் விசுவாசத்தை பரிசோதித்து பார்ப்பது இதுதான்.

உங்கள் வேலை, பிரயாணம், படிப்பு, திருமணம், எதிர்காலத்தின் காரியங்களுக்கு விசுவாசிக்க முடிகிறதா? எபிரெயர் 11:6 விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருக்க முடியாது. யூதா 20 உங்கள் மகா பரிசுத்த விசுவாசத்தின்மேல் அடியெடுத்து வைக்க வேண்டும். உங்கள் வியாதியில், உங்கள் போராட்டத்தில் இல்லாததை விசுவாசிக்க வேண்டும். விசுவாசத்தில் ஆபிரகாம் தேவனை மகிமைப்படுத்தினார். இன்றைக்கு உங்கள் விசுவாசம் எப்படிப்பட்டது? 2 சாமுவேல் 19:17,18 தாவீதை அக்கரைக்கு கொண்டு செல்ல படகு வந்தது என்று பார்க்கிறோம். ஒவ்வொருவருக்கும் விசுவாசம் தேவை. விசுவாசிக்க வேண்டும். அதை அப்பியாசப்படுத்த வேண்டும். விசுவாச வாழ்க்கை வாழ வேண்டும். உங்கள் துன்பங்களில், வேதனைகளில், நெருக்கமான சூழ்நிலைகளில் விசுவாசம் வேண்டும்.

நீ அக்கரை செல்ல வேண்டும்

1. அக்கரை செல்ல உங்களுக்கு **விசுவாசம் தேவை.** மத்தேயு 14:22 இந்த படகு விசுவாச வாழ்வை காட்டும். (1 தீமோத்தேயு 1:19) விசுவாசமாகிய கப்பல்.
2. 2 ராஜாக்கள் 2:8-14 எலியா எலிசா சால்வை வைராக்கியத்தை காட்டுகிறது. இந்த மார்க்கத்தில் வந்த பின் தேவனுக்காக **வைராக்கியமாக வாழ வேண்டும்** (ஏசாயா 59:17).
3. யோசுவா 3,4 அதிகாரம்-**வல்லமையுள்ள பெட்டி**, நீ கர்த்தரின் பெட்டியாக இருக்க வேண்டும்.

4. யோசுவா 3:5 பரிசுத்த வாழ்க்கை செய். பாவத்துக்கு நீ **அடிமைப்படக்கூடாது**. பாவிகளுக்கு நீங்கள் அடிமைப்படக்கூடாது. 2 ராஜாக்கள் 4:1 துன்மார்க்கனிடம் நீங்கள் கடன் வாங்கிவிட்டால் நீங்கள் அவனுக்கு அடிமை, நீங்கள் பரலோகம் போக முடியாது.

1 கொரிந்தியர் 6:9-12 ஒன்றுக்கும் அடிமைப்படமாட்டேன். யோவான் 8:34 பாவம் செய்கிறவன் பாவத்துக்கு அடிமை. இந்த உலக வழிபாட்டுக்கு அடிமைப்படாதே (கலாத்தியர் 4:3). உங்களை கர்த்தர் இவற்றிலிருந்து விடுதலையாக்கினார். நீங்கள் அடிமைப்படாதேயுங்கள். நீங்கள் கானானுக்கு போக வேண்டியவர்கள்.

அன்பானவர்களே, நாம் இக்கரையில் நிரந்தரமாக தங்குவதற்காக அழைக்கப்படவில்லை; அக்கரையை அடைவதற்காக அழைக்கப்பட்டிருக் கிறோம். அன்று சீஷர்களுக்கு வந்த அதே அழைப்பு இன்று நமக்கும் வருகிறது: "அக்கரைக்குப் போங்கள்!" இந்த உலகம் நமக்கு நிரந்தரமானது அல்ல. பிள்ளைகள், பணம், வசதிகள், ஆசீர்வாதங்கள்-இவை அனைத்தும் தேவன் கொடுக்கும் நன்மைகள். ஆனால் இவைகளே நமது இறுதி இலக்காகிவிடக்கூடாது. தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தின் முழுமை அக்கரையில் இருக்க யோர்தானுக்கு இக்கரையில் நல்ல மேய்ச்சல் நிலத்தைக் கண்டு அங்கேயே தங்கிவிட்ட ரூபன், காத், மனாசே கோத்திரத்தினர் போல நாம் மாறிவிடக்கூடாது. நமது இறுதி இலக்கு- பரலோகமாகிய அக்கரை! ஒரு நாள் இந்த உலகப் பயணம் முடியும். அன்று ''என் ஓட்டத்தை முடித்தேன்; விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்" (2 தீமோத்தேயு 4:7) என்பதே நாம் சொல்லக்கூடியதாக இருக்கட்டும்.

சூழ்நிலை மாறினாலும் இயேசுவை விட்டு விலகாமல் விசுவாசமாகிய கப்பலில் தொடர்ந்து பயணம் செய்யுங்கள். தேவனுக்கான வைராக்கிய அக்கினியை உங்கள் இருதயத்தில் காத்துக்கொள்ளுங்கள். வாழ்க்கையின் முன்னால் தேவன் செல்லட்டும். இக்கரையின் பாவம் உங்களை பிடித்துக்கொள்ள விடாதேயுங்கள்.

யோர்தான் பெருக்கெடுத்து ஓடினாலும், புயல் பெரிதாக இருந்தாலும், வழி தெரியாவிட்டாலும், உங்கள் பலம் குறைந்தாலும், இக்கரையின் ஆசீர்வாதங்களில் நின்றுவிடாமல் அக்கரையாம் பரலோக ராஜ்யத்திற்கு விசுவாசத்தோடு, பரிசுத்தத்தோடு, வைராக்கியத்தோடு, இயேசுவோடு செல்லுங்கள். அக்கரை நமக்காக காத்திருக்கிறது.

மறுகரையில் மன்னன் மாளிகையில்...

ஜெபியுங்கள் ! தாங்குங்கள் !!

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை ஊழியத்தின் மூலம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள், எனவே உங்கள் சாட்சிகளை எழுதி அனுப்புங்கள். பத்திரிக்கை ஊழியத்தின் தேவையை சந்திக்க ஒரு வெளியீட்டிற்கு ஆகும் செலவு ரூ.**1,25,000** உதாரத்துவமாய் கொடுத்து உதவுங்கள் அல்லது உங்களால் இயன்ற அளவு கொடுத்து பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள். இவை எல்லாவற்றிக்கும் மேலாக தொடர்ந்து இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள் நன்றி.



சிறுவர் பகுதி

தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ

பாஸ்டர். பெவிஸ்டன்

பூரண கிருபை ஏ.ஜி சபை, கருப்பாயூரணி, மதுரை-20
Contributing Editor, Paripoorana Jeevan

ஹாய் குட்டீஸ், எல்லாரும் எப்படியிருக்கீங்க. சிறுவர் தினம் மற்றும் கிறிஸ்துமஸ் பண்டிகையை கொண்டாட ரெடியா இருப்பீங்கன்னு நம்புறேன். உங்கள் ஒவ்வொருவருக்கும் அட்வான்ஸ் சிறுவர் தினம் மற்றும் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள். இந்த மாதம் உங்களை ஒரு சூப்பர் ஸ்டோரியோட மீட் பண்ணுவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். வாங்க வெயிட் பண்ணாம நம்ம கதை உலகத்துக்கு போகலாம்.

செல்வின் பத்தாம் வகுப்பு படிக்கும் மாணவன். அவனுடைய வீட்டிற்குப் பக்கத்தில் 74 வயதான ஒரு பாட்டி தனியாக வசித்து வந்தார். அவருடைய கணவர் இறந்துவிட்டதால், அவர் தனிமையில் வாழ்ந்து வந்தார்.

அந்தப் பாட்டி அவ்வப் போது செல்வினிடம் சிறுசிறு உதவிகளைக் கேட்டுக்கொண்டே இருப்பார். குப்பைப் பையை எடுத்துச் சென்று போடுவது, கடையில் டிபன் வாங்கிக் கொடுப்பது, புரியாத கடிதத்தைப் படித்துக் காட்டுவது, மருந்து வாங்கச் செல்லும்போது உடன் வருவது எனப் பல உதவிகளைக் கேட்பார்.

ஆரம்பத்தில் செல்வின் மகிழ்ச்சியுடன் அவருக்கு உதவி செய்தான். ஆனால், நாளடைவில், இந்தப் பாட்டி எப்போதும் என்னிடமே உதவி கேட்கிறார்களே! என்னால் படிக்கவும் விளையாடவும் நேரம் இல்லாமல் போய்விடுகிறது என்று நினைக்கத் தொடங்கினான்.

ஒருநாள் பொறுமை இழந்த செல்வின், பாட்டி, எல்லாவற்றிற்கும் என்னையே சார்ந்திருக்கக்கூடாது. உங்களால் முடிந்த வேலைகளை நீங்களே செய்துகொள்ள வேண்டும் என்று சொல்லிவிட்டான். பாட்டி அமைதியாக அவனைப் பார்த்தார். பிறகு, சரி தம்பி, புரிகிறது. நன்றி என்று மட்டும் சொல்லிவிட்டு வீட்டிற்குள் சென்றார். அதன்பிறகு அவர் செல்வினிடம் எந்த உதவியும் கேட்கவில்லை.

இரண்டு வாரங்கள் கழித்து, செல்வின் பள்ளிக்குச் சென்றுகொண்டிருந்தபோது, அந்தப் பாட்டியை நடைபாதையில் சந்தித்தான். அவருடைய ஒரு கையில் குப்பைப் பையும், மற்றொரு கையில் மருத்துவர் எழுதிய மருந்துச் சீட்டும் இருந்தன.

அவரைப் பார்த்த செல்வின், என்ன பாட்டி, இப்போது எல்லா வேலைகளையும் நீங்களே செய்துகொள்கிறீர்கள் போலிருக்கிறதே! என்று கேட்டான். பாட்டி மெதுவாகப் புன்னகைத்துவிட்டு, தம்பி, என்னால் எப்போதும் தனியாகவே இந்த வேலைகளைச் செய்ய முடியும் என்றார். இதைக் கேட்ட செல்வின் ஆச்சரியப்பட்டான். அப்படியானால், ஏன் பாட்டி என்னிடம் அடிக்கடி உதவி கேட்டீர்கள்?என்று கேட்டான்.

அப்போது பாட்டி சொன்ன பதில் செல்வினுடைய மனதை மிகவும் பாதித்தது. தம்பி, என் கணவர் இறந்ததிலிருந்து பல நாட்கள் நான் யாருடனும் பேசுவதில்லை. இந்த வீட்டில் நான் தனியாகத்தான் இருக்கிறேன். குப்பைப் பையை எடுத்துச் செல்வதும், டிபன் வாங்குவதும், கடிதத்தைப் படிப்பதும் எல்லாம் வெறும் காரணங்கள்தான். அந்தக் காரணங்களைக் கூறி யாராவது ஒருவருடைய கதவைத் தட்டி, ஐந்து நிமிடங்களாவது பேசிக்கொண்டிருக்கலாம் என்பதுதான் என் ஆசை. எனக்கு உதவி தேவைப்பட்டது உண்மைதான்; ஆனால், அதைவிட என்னிடம் அன்பாகப் பேசுவதற்கு ஒருவர் தேவைப்பட்டார் என்றார். இதைக் கேட்ட செல்வின் பேச்சற்று நின்றான். இதுவரை பாட்டி தன்னுடைய நேரத்தை வீணடிப்பதாக

நினைத்திருந்தான். ஆனால், அவருக்கு வேண்டியதெல்லாம் கொஞ்சம் அன்பும், சிறிது நேரமும், பேசுவதற்கு ஒரு மனிதரும்தான் என்பதை அன்றுதான் புரிந்துகொண்டான்.

பாட்டி தொடர்ந்து, பரவாயில்லை தம்பி! இனிமேல் உன்னைத் தொந்தரவு செய்யமாட்டேன் என்று கூறிவிட்டுச் சென்றார். அந்த வார்த்தைகள் செல்வினுடைய மனதை மிகவும் வருத்தின. நான் பாட்டியிடம் அன்பாகப் பேசியிருக்கலாமே! அவருடைய தனிமையைப் புரிந்துகொள்ளாமல் நடந்துகொண்டேனே! என்று வருந்தினான். அன்று மாலை பள்ளியிலிருந்து வந்ததும் செல்வின் பாட்டியின் வீட்டிற்குச் சென்றான். பாட்டி கதவைத் திறந்ததும், பாட்டி, என்னை மன்னித்துவிடுங்கள். நான் உங்களிடம் அப்படிப் பேசியிருக்கக்கூடாது. இனிமேல் உங்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதோடு, தினமும் கொஞ்ச நேரம் உங்களுடன் பேசவும் வருகிறேன் என்றான்.

இதைக் கேட்ட பாட்டியின் கண்களில் கண்ணீர் மல்கியது. அது துக்கத்தின் கண்ணீர் அல்ல; தன்னைப் புரிந்துகொள்ள ஒருவர் இருக்கிறார் என்ற மகிழ்ச்சியின் கண்ணீர். அன்று முதல் செல்வின் தினமும் சிறிது நேரம் பாட்டியுடன் பேசுவதை வழக்கமாக்கிக் கொண்டான். பள்ளியில் நடந்த நிகழ்வுகள், நண்பர்களைப் பற்றிய செய்திகள், படிப்பில் ஏற்பட்ட அனுபவங்கள் என அனைத்தையும் பாட்டியிடம் பகிர்ந்துகொண்டான். பாட்டியும் தன்னுடைய வாழ்க்கை அனுபவங்களையும், நல்ல அறிவுரைகளையும் செல்வினுக்குக் கூறினார்.

இதனால் செல்வின் ஒரு நல்ல பாடத்தைக் கற்றுக்கொண்டான். முதியவர்கள் நம்மிடம் உதவி கேட்கும்போது, அவர்களுடைய தேவையை மட்டும் பார்க்காமல், அவர்களுடைய மனதையும் புரிந்துகொள்ள வேண்டும் என்பதை உணர்ந்தான்.

தம்பி தங்காய்.. நம் தாத்தா, பாட்டி மற்றும் முதியவர்கள் நம்மிடம் கேட்பது சில நேரங்களில் ஒரு சிறிய உதவியாக இருக்கலாம். ஆனால், அவர்களுடைய உள்ளத்தில் இருப்பது தனிமையாகவும் இருக்கலாம். அவர்களுக்குப் பணமும் பொருளும் மட்டுமல்ல; நம்முடைய அன்பும், நேரமும், கவனமும் தேவை.

இன்றைய மாணவர்களாகிய நாம் படிப்பு, கைப்பேசி, விளையாட்டு என்று நேரத்தைச் செலவிடுகிறோம். ஆனால், நம்முடைய தாத்தா பாட்டியுடன் அமர்ந்து பேசுவதற்கும், அவர்களுடைய அனுபவங்களைக் கேட்பதற்கும், அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதற்கும் நேரம் ஒதுக்க வேண்டும்.

பெரியவர்களிடம் அன்பாகப் பேசுங்கள். தாத்தா பாட்டியுடன் நேரம் செலவிடுங்கள். அவர்கள் சொல்லும் கதைகளைக் கேளுங்கள். அவர்களுடைய தேவைகளைப் புரிந்துகொள்ளுங்கள். ஏனென்றால், நாம் ஒதுக்கும் சில நிமிடங்கள் அவர்களுடைய வாழ்க்கையில் மிகப்பெரிய மகிழ்ச்சியை ஏற்படுத்தலாம். முதிர்வயதானவர்களுக்கு மதிப்பளிக்கும் விதமாக எழுந்திருந்து, அவர்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளை செய்வது தேவனுக்கு பயப்படுதலில் ஒரு பகுதி என இறை வேதம் கூறுகிறது.

"நரைத்தவனுக்கு முன்பாக எழுந்து, முதிர்வயதுள்ளவன் முகத்தைக் கனம்பண்ணி, உன் தேவனுக்குப் பயப்படுவாயாக; நான் கர்த்தர்" (லேவி. 19:32).

நினைவில் கொள்ளுங்கள்: பெரியவர்களுக்கு நாம் கொடுக்கும் மிகப்பெரிய பரிசு விலையுயர்ந்த பொருள் அல்ல; அன்போடு ஒதுக்கும் நம்முடைய நேரம்தான் என்பதை மனசார தெரிஞ்சுக்கோங்க! புரிஞ்சுக்கோங்க!! இந்த மாத சிறுவர் பகுதி உங்களுக்கு மிகுந்த ஆசீர்வாதமாக இருந்திருக்கும் என நம்புகிறேன். உங்களது மேலான கருத்துக்களையும், சாட்சிகளையும் 9750381784 என்ற வாட்சாப் எண்ணிற்கு தெரியப்படுத்தலாம். அடுத்த இதழில் மற்றொரு சுவாரசியமான ஸ்டோரியோடு உங்களை மீட்பண்ணுறேன். டாட்டா.



மீள்பார்வை
(Review, Revision, Retrospective)

Rev. ஜான் பரணீஸ்வரன்
இயக்குநர், கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான அன்பு மாணவ மாணவியரே, உங்கள் யாவருக்கும் கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியம் சார்பாக அன்பின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். நீங்கள் இந்தக் கல்வியாண்டை இனிதே ஆரம்பித்து காலாண்டுக்குள் கடந்து வந்துவிட்டீர்கள். தற்போது பள்ளி மாணவர்கள் காலாண்டு தேர்வையும், கல்லூரி மாணவர்கள் முதல் செமஸ்டர் தேர்வையும் எழுதி முடித்து இருப்பீர்கள். இனி இதைவிட பெரிய தேர்வுகளுக்கு ஆயத்தப்பட வேண்டிய அவசியம் இருக்கிறது. எனவே இப்போது, இதுவரை நடந்த காரியங்களை மீள்பார்வை செய்ய வேண்டும். இது குறித்து இந்தக் கட்டுரையில் விரிவாகக் காண்போம்.

மீள்பார்வை என்றால் என்ன? What do we mean by Review, Revision, Retrospective?

மீள்பார்வை என்பது, ஒரு விஷயத்தை மீண்டும் ஒருமுறை கூர்ந்து கவனிப்பது, சரிபார்ப்பது, நினைவுபடுத்திப் பார்ப்பது என்று பொருள்படும். இது பயன்படுத்தப்படும் சூழலைப் பொறுத்து பின் வருமாறு பிரிக்கப்படுகிறது.

- **கல்வியில்-Revision:** மாணவர்கள் தேர்வுக்காக, ஏற்கனவே படித்த பாடங்களை மீண்டும் ஒரு முறை படித்து நினைவுப்படுத்திக் கொள்வதை மீள்பார்வை என்பார்கள்.
- **மதிப்பீடு அல்லது விமர்சனம்-Review:** ஒருவரின் பணித்திறனைப் பார்த்துவிட்டு, அதன் நிறைகுறைகளை ஆராய்ந்து கருத்து தெரிவிப்பதைக் குறிக்கும்.
- **நிர்வாகத்தில்-Retrospective:** ஒரு திட்டம் அல்லது வேலை முடித்த பிறகு, அதில் என்னென்ன தவறுகள் நடந்தன. எவை நன்றாக அமைந்தன என்பதைத் திரும்பிப் பார்த்து, அடுத்த முறை மேம்படுத்துவதைக் குறிக்கும்.

சுருக்கமாகச் சொன்னால், கடந்த கால நிகழ்வுகளையோ அல்லது ஏற்கனவே செய்த ஒரு செயலையோ மறுபரிசீலனை செய்து பார்ப்பதே மீள்பார்வை ஆகும். இவைகள் எல்லாவற்றையும் இப்போது நீங்கள் செய்தால், இனிவரும் நாட்களில் இதைவிட பெரிய தேர்வுகளைச் சிறப்பாக செய்ய அது பெரிய உதவியாக இருக்கும்.

மீள்பார்வை ஏன் அவசியம்? Why is a Review (Revision, Retrospective) necessary?

- படித்த பாடங்களை மீண்டும் நினைவுப்படுத்திப் பார்த்து உங்கள் நினைவுத் திறனை வளர்த்துக்கொள்ள.
- நடந்து முடிந்த தேர்வுகளை, எப்படி எழுதினீர்கள்? படிப்பில் உங்கள் திறன் எப்படி இருந்தது? என்பதை ஆராய்ந்து பார்க்க.
- இந்தமுறை எதிர்பார்த்தபடி மதிப்பெண்கள் எடுக்க முடியாமல் இருந்தால், அது எதினால் என்பதை அறிந்து, அடுத்தத் தேர்வை சிறப்பாகச் செய்ய திட்டமிட.

- தோல்வியில் இருந்து பாடம் கற்றுக்கொண்டு வெற்றியை நோக்கி நடைபோட.
- வெற்றியடைய யாரெல்லாம் உதவிசெய்வார்கள்? என்பதை ஆய்ந்து அறிந்து, அவர்களின் உதவியைப் பெற்றுக்கொள்ள.
- அடுத்து வரும் தேர்வுகளில் சிறந்த வெற்றியைப் பெற, படிப்பதில் புதிய வழிமுறைகளை கண்டறிந்து நடைமுறைப்படுத்த.

வேதத்திலிருந்து மீள்பார்வை குறித்த ஒரு நடைமுறைபாடம் : A practical lesson on review (Revision, Retrospective) from the Bible.

வேதத்தில், யோசுவா புத்தகத்தின் 7 ஆம் அதிகாரத்தில் யோசுவா ஆயி என்கிற சிறிய பட்டணத்தின்மேல் நடந்த யுத்தத்தில் பெற்ற தோல்வி குறித்து எழுதப்பட்டுள்ளது. 8 ஆம் அதிகாரத்தில் அந்த யுத்தம் மற்றும் அதற்கு முன் நடந்த எரிகோபட்டண யுத்தம் குறித்து மீள்பார்வை செய்யும்படி தேவன் வழிநடத்தியதையும், அதன்பின் ஆயி பட்டண யுத்தத்தில் மட்டுமல்ல, 30 க்கும் மேற்பட்ட எதிரி ராஜாக்களோடு நடந்த யுத்தங்களிலும் தோல்வியே காணாமல் வெற்றியடைந்ததையும் குறித்து யோசுவா புத்தகத்தில் வாசிக்கிறோம்.

இந்தக் குறிப்பிட்ட வேத பகுதியில், மீள்பார்வை மூலம் யோசுவா கற்றுக்கொண்ட பாடங்கள்:

- எரிகோ பட்டணத்தில் மிகப்பெரிய வெற்றிக் கிடைத்திருந்தாலும், அந்த யுத்தத்தில் நடந்த சிறிய தவறுகளை யோசுவா அறியாதிருந்தான் (ஆகான் செய்த தவறு). இது அடுத்த சிறிய யுத்தத்திலும் தோல்வியை சந்திக்க காரணமாக இருந்தது (யோசுவா 7:11,12).
- எரிகோ பட்டண யுத்தத்திற்காக செய்த பெரிய திட்டமிடுதல், ஆயத்தம் எல்லாம் சிறிய ஆயி பட்டண யுத்தத்திற்காக செய்யவில்லை (யோசுவா 7:3). நீங்களும் பல நேரங்களில் ஆண்டு இறுதித்தேர்வு, பொதுத்தேர்வு, போட்டித்தேர்வுகளுக்காக ஆயத்தப்படுகிற அளவுக்கு மற்ற சிறிய தேர்வுகளுக்கு ஆயத்தப்படுவதில்லை.
- சிறிய யுத்தத்தில் சிறிய தோல்வி வந்தபோது, யோசுவா சோர்ந்து படுத்தது மட்டுமல்லாமல் தேவனையும், சூழ்நிலைகளையும் குறைகூற ஆரம்பித்துவிட்டான் (யோசுவா 7:4-7).
- யுத்தத்தில் மீண்டும் வெற்றிபெற வாய்ப்பு இருக்கிறது. உதவிசெய்ய தேவனும், போர் வீரர்களும் இருக்கிறார்கள். அவர்களின் உதவியைப் பெறலாம் என்பதை யோசுவா மறந்து போனான் (யோசுவா 7:10).
- தோல்வியைக் கண்ட யுத்தத்தில் மீண்டும் வெற்றியடைய ஒரு புதிய வழிமுறை (New strategy) இருக்கும் என்பதை அறியாமல் போனான். தேவனே அவனுக்கு அதைச் சொல்லிக்கொடுத்தார் (யோசுவா 8:1-4).

மேற்கண்ட எல்லாவற்றையும் மீள்பார்வை மூலம் கண்டுபிடித்து, சரிசெய்து வெற்றிபெற தேவனே அவனை வழிநடத்தினார். அன்பு மாணவ மாணவியரே! இந்தக் கட்டுரை மூலம் தேவன் உங்களோடு பேசி, உங்களையும் மீள்பார்வை செய்யும்படி வழிநடத்துகிறார் என்பதை அறிந்து இன்றே அதைச் செய்யுங்கள். இனிவரும் தேர்வுகளில் வெற்றிபெறுங்கள்! சாதனை படையுங்கள்! தேவன் உங்களோடு இருக்கிறார். நாங்களும் உங்களுக்கு பல விதங்களில் உதவிசெய்ய ஆயத்தமாக இருக்கிறோம். உங்கள் பெற்றோரும் உங்கள் வெற்றியில் அதிக அக்கறையாக இருக்கிறார்கள். பயன்படுத்திக் கொள்ளுங்கள்! கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்.



சிறுவர்களை கொண்டாடுங்கள்

Rev. S.P. ராஜசெல்வம்

இயக்குநர், தமிழ் பிரதேச சிறுவர் ஊழியங்கள்

இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே பரிபூரண ஜீவன் வாசகர்கள் ஒவ்வொருவருக்கும் வாழ்த்துக்கள். இன்றைய இதழ் வாயிலாக உங்களை சந்திப்பதில் அதிக மகிழ்ச்சி அடைகிறேன்.

வருகிற நவம்பர் மாதம் உலக அளவில் சிறுவர் தின நாட்களை கொண்டாடுகிறார்கள். ஐக்கிய நாடுகள் சபை 1954 ஆம் ஆண்டு முதல் நவம்பர் 20ஆம் தேதியை உலகளாகிய குழந்தைகள் தினமாக கடைபிடிக்கிறது. ஆனால் இந்தியாவில் குழந்தைகள் தினம் நவம்பர் 14ஆம் தேதி இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் பிறந்தநாளில் கொண்டாடப்பட்டு வருகிறது.

இங்கிலாந்து தேசத்தை சார்ந்த ராபர்ட் ரைக்ஸ் (Robert Raikes) என்பவரால் 1780-ம் ஆண்டு தொடங்கப்பட்ட ஞாயிறு பள்ளி இயக்கத்தின் சிறப்பான பாரம்பரியத்தை கொண்டிருக்கிறது. தொழிற்சாலை பணிகளில் இருந்து கிடைக்கும் ஒரு ஓய்வுநாளில் பின்தங்கிய நிலையில் உள்ள குழந்தைகளுக்கு கல்வி அளிக்கும் முயற்சியாக தொடங்கப்பட்டு, இது பின்னர் விசுவாசம், கற்றல் மற்றும் சீஷத்துவத்தை வளர்க்கும் ஒரு உலகளாவிய ஊழியமாக வளர்ந்து ஞாயிறு பள்ளி வாயிலாக தேவனின் வார்த்தையில் தொடர்ந்து வளர்ந்து வரும் பல தலைமுறை குழந்தைகளுக்காக கர்த்தரை துதிக்கிறோம். இதனடிப்படையில் தான் உலகளவில் சிறுவர் தினம் கொண்டாடப்பட்டது.

நம் தேசத்தில் நவம்பர் 14ஆம் தேதி கொண்டாடப்படும் சிறுவர் தினத்தை முன்னிட்டு பிள்ளைகளை விசுவாசத்தில் வளர செய்வதும் நல்ல எதிர்காலத்தை வடிவமைத்தலும் மிக முக்கியமான ஒன்றாகும். எனவே இந்த சிறுவர் தினத்தை சிறப்பான நாட்களாய் அனுசரிக்க அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அந்த நாளில் கீழ்கண்ட இரண்டு தலைப்புகளை கொண்ட காரியங்களை கற்றுக்கொடுத்து இதில் வளர செய்யவும் கீழே சொல்லப்படுகிற ஆலோசனைகளின்படி சிறுவர் தினத்தை சிறப்பாக கொண்டாட உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நிச்சயம் கர்த்தர் உங்களையும் சிறு பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பாராக.

பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான். (நீதிமொழிகள் 22:6). இந்த வசனத்தின் அடிப்படையில் சிறு பிள்ளைகளை அவர்கள் நடக்க வேண்டிய வழியில் ஆசிரியர்களாகிய நாம் அவர்களை வழிநடத்தும்போது முதிர் வயதிலும் அவர்கள் அதை விடாதிருப்பார்கள். கீழ்கண்ட காரியங்களில் முதலாவதாக அவர்களை கட்டி எழுப்ப வேண்டும்

1. விசுவாசத்தில் வளர்த்தல் (Nurturing Faith)

சபையின் பிள்ளைகளுக்கும் சபையின் வெளியில் காணப்படும். பிள்ளைகளுக்கும் தேவனை அறிமுகப்படுத்தி, வேத வசனங்களைக் கற்றுக்கொடுத்து, நன்றாக ஜெபிக்கவும், தொடர்ச்சியான ஜெப வாழ்க்கையை உருவாக்க செய்து இயேசுவின் அன்பையும் கீழ்ப்படிதலையும் கற்றுக்கொடுத்தல் இன்றைய காலகட்டத்தில் காணப்படும் சிறுபிள்ளைகளுக்கு இன்றியமையாத

ஒன்றாகும். வேதத்தில் காணப்படும் விசுவாசத்தின் மூலம் நன்மைகளையும் வெற்றியையும் அடைந்த விசுவாச வீரர்களின் வாழ்க்கை சரித்திரத்தை எளிமையான முறையில் கற்றுக்கொடுத்து ஒவ்வொரு சிறு பிள்ளைகளையும் விசுவாசத்தில் சிறு வயது முதற்கொண்டு வளர செய்ய வேண்டும். 2 தீமோ.3:15-ல் சொல்லப்படுவது போல பிள்ளைகள் சிறுவயது முதல் பரிசுத்த வேதவாக்கியங்களைக் கற்றுக்கொள்ள வழிநடத்த வேண்டும்.

2. எதிர்காலத்தை வடிவமைத்தல் (Shaping the Future)

கர்த்தருக்கு பயந்து வாழும், தேவபயமுள்ள தலைமுறையை உருவாக்க வேண்டும். சிறு பிள்ளைகள் சிறு வயது முதல் கொண்டு நல்ல குணநலன்களில் வளர செய்ய வேண்டும். இந்த காலகட்டத்தில் காணப்படும் எல்லா சவால்களையும் விசுவாசத்துடன் எதிர்கொள்ளப் பயிற்றுவிக்க வேண்டும். சிறுபிள்ளைகள் நாளைய தலைவர்களாகவும், தேவனுடைய சாட்சிகளாகவும் உருவாக்குதல் வேண்டும். சங்கீதம் 78:4-வாசிப்பதுப்போல் வரப்போகும் தலைமுறையினருக்குக் கர்த்தருடைய துதியையும் வல்லமையையும் அறிவித்தல் வேண்டும்.

இன்று நாம் பிள்ளைகளின் இருதயத்தில் விதைக்கும் விசுவாசமே, நாளை அவர்கள் வாழ்வில் கனிதரும்! "The faith we sow in children today will shape the leaders of tomorrow." எனவே சிறு பிள்ளைகளை விசுவாசத்தில் வளரச் செய்யவும் எதிர்காலத்தில் நல்ல சந்ததியாய் உருவாக்குவதற்கு வருகிற நவம்பர் மாதம் நடைபெறுகிற சிறுவர் தினத்தில் ஆராதனையில் பிள்ளைகளுக்கு என்று பிரத்தியேகமாக சிறப்பு நிகழ்ச்சிகளையும் அவர்களுக்கு சிறப்பு பிரார்த்தனையும் ஆலோசனையும் கொடுத்து அவர்களை ஊக்குவிக்க அன்போடு கேட்டுக்கொள்கிறேன். கர்த்தர் நிச்சயமாய் உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக.

பற்களை பாதுகாப்பது எப்படி?



★ தினசரி காலை எழுந்தவுடன், இரவு உணவுக்குப்பின் பல் துலக்க வேண்டும்.

★ எப்போது சாப்பிட்டாலும், வெந்நீர் அல்லது கல்லுப்பு கலந்த வெந்நீரால் வாயைக் கொப்பளிக்க வேண்டும்.

★ பற்களைத் துலக்கும்முன் பிரஷை, குழாயைத் திறந்துவிட்டு நேரடியாகத் தண்ணீரில் கழுவ வேண்டும். கப்பில் பிடித்துவைத்த நீரில் கழுவக்கூடாது.

★ நீண்ட நேரம் பற்களைத் தேய்க்கக்கூடாது அழுத்தியும் தேய்க்கக்கூடாது.

★ இனிப்புகள், குளிர்ந்த மற்றும் கூடான உணவுகளை அதிகமாக உட்க்கொள்ளக் கூடாது.

★ தூங்கி எழுந்ததும் பல் துலக்காமல் காபி, பால் போன்றவற்றைப் பருகக்கூடாது. இவை, பற்களில் உள்ள உணவுத் துணுக்குகளை வயிற்றுக்குள் கொண்டு சென்றுவிடும். அதனால் பல வயிற்று உபாதைகள் ஏற்படும்.

★ கடினமாக பொருள்களை கடிக்கக்கூடாது. பற்களை, குளிர்பானங்களைத் திறக்கும் ஓப்பனர்களாகப் பயன்படுத்தக்கூடாது.

★ புகைப்பழக்கத்தைத் தவிர்க்க வேண்டும்.

விசேஷ தினங்களும் ஜெபக்குறிப்புகளும்

1. **நவம்பர் 10** - உலக அறிவியல் தினம் (World Science Day for Peace and Development) - அறிவியல் ஆராய்ச்சியும், தொழில்நுட்ப வளர்ச்சியும் பெருகி வரும் இக்காலத்தில் விஞ்ஞானம் மக்களுக்கு சமாதானத்தையும், வளர்ச்சியையும் கொடுக்க ஜெபிப்போம்.



2. **நவம்பர் 11** - தேசிய கல்வி தினம் (National Education Day) - இந்தியாவில் கல்வியறிவு பெறாத 35%ற்கும் அதிகமாக மக்களுக்காக ஜெபிப்போம்.

3. **நவம்பர் 14** - உலக நீரழிவு தினம் (World Diabetes Day)-உலகளவில் 36.6 கோடி மக்கள் சர்க்கரை நோயால் பாதிக்கப் பட்டுள்ளனர். இக்கொடிய வியாதியிலிருந்து மக்களுக்கு விடுதலை கிடைக்க ஜெபிப்போம். வருகிற 2030ம் ஆண்டு இந்த எண்ணிக்கை இருமடங்காக உயரும் என்று புள்ளிவிபரம் கூறுகிறது. நோயின் காரணங்களை அறிந்து மக்கள் விழிப்பாய் செயல்படஜெபிப்போம்.

4. **நவம்பர் 14** - குழந்தைகள் தினம் (India's Children day)-இந்தியாவில் உள்ள குழந்தைகளின் வளர்ச்சி, பாதுகாப்பு ஆகியவற்றிற்காக ஜெபிப்போம். இந்தியாவில் பள்ளிக்குச் செல்லும் வயதுடைய 22 கோடி சிறுபிள்ளைகளில் 10.5 கோடி சிறுபிள்ளைகள் மாத்திரமே பள்ளிக்குச் செல்கின்றனர். இந்நிலை மாற ஜெபிப்போம். பள்ளி செல்லும் வயதிலுள்ள குழந்தைகளில் 5.75 இலட்சம் சிறுமிகள் விபச்சாரத் தொழிலில் உள்ளனர். இந்நிலை மாற ஜெபிப்போம். சரியான உணவு இல்லாமை, ஊட்டச்சத்து குறைவு, குறைவான மருத்துவ வசதி போன்ற காரணங்களினால் அநேக குழந்தைகள் மரித்துப்போகின்றன. இந்நிலை மாற ஜெபிப்போம்.

5. **நவம்பர் 14** - உலக பெண் குழந்தை தினம் (International Girls Day)-பெண் குழந்தைகளுக்கு எதிரான செயல்கள், வன்முறைகள், குற்றங்கள் நடைபெறாமலிருக்க ஜெபிப்போம். வேலை செய்யும் பெண்களின் பாதுகாப்பிற்காக ஜெபிப்போம். பெண் குழந்தைகள் எதிர்பார்க்கும் அன்பு, தங்கள் பெற்றோர்கள் மற்றும் குடும்பத்தினரிடம் இருந்து கிடைக்க ஜெபிப்போம்.

6. **நவம்பர் 16** - உலக சகிப்புத்தன்மை தினம் (International day of Tolerance)-உலக மக்களிடையே சகிப்புத்தன்மை, மனித நேயம் வளர ஜெபிப்போம்

7. **நவம்பர் 19** - உலக கழிப்பறை தினம் (World Toilet Day)-உலகளவில் 26 இலட்சம் மக்கள் போதுமான கழிப்பறை வசதி இன்றி உள்ளனர். இந்த அடிப்படைத் தேவை சந்திக்கப்பட ஜெபிப்போம்.

8. **நவம்பர் 19** - உலக ஆண்கள் தினம் (International Men's Day)-கிறிஸ்தவ ஆண்களின் ஒழுக்கம், முன்மாதிரியான வாழ்க்கைக்காக ஜெபிப்போம்.

9. **டிசம்பர் 1** - உலக எய்ட்ஸ் விழிப்புணர்வு தினம் (World AIDS Awareness Day)-தற்பொழுது உலகளவில் 40 கோடி மக்கள் எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நோய் முற்றிலும் தடுக்கப்படும்படி ஜெபிப்போம். இந்தியாவில் 4.58 கோடி மக்களும், தமிழகத்தில் 8-10 இலட்சம் மக்களும் எயிட்ஸால் பாதிக்கப்பட்டுள்ளனர். தேசத்தில் பாலுணர்வு வாழ்வில் பரிசுத்தம் காணப்பட ஜெபிப்போம்.

10. **டிசம்பர் 2** - உலக மாசு கட்டுப்பாட்டு தினம் (World Pollution Prevention Day)-சுத்தமற்ற தண்ணீரினால் ஒவ்வொரு நாளும் உலகளவில் 14,000 மக்கள் உயிரிழக்கின்றனர். சுற்றுப்புறத்தூய்மையில் நாடு வளர ஜெபிப்போம். ஒவ்வொரு நாளும் இந்தியாவில் 1000 குழந்தைகள் வயிற்றுப்போக்கு நோயினால் மரிக்கின்றனர். சுத்தமான உணவு வசதி கிடைக்கப்பெற ஜெபிப்போம்.

11. **டிசம்பர் 2** - உலக அடிமைத்தன ஒழிப்பு தினம் (International Day for Abolition of slavery)- பெண் பிள்ளைகளை கடத்தியும், விற்றும் அடிமைப்படுத்தும் நிலை இந்தியாவில் விட்டு மறையஜெபிப்போம். 5 முதல் 14 வயதுடைய 7 இலட்சம் குழந்தைகள் இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் விற்கப்படுகின்றனர். பிள்ளைகளின் பாதுகாப்பிற்காக ஜெபியுங்கள்.

12. **டிசம்பர் 3** - உலக ஊனமுற்றோர் தினம் (World Disabled day). ஆய்வின்படி உலகளவில் 65 கோடி மக்கள் ஊனமுற்று உள்ளனர். இவர்களுக்காக ஜெபியுங்கள். தமிழகத்தில் மனவளர்ச்சி குன்றியுள்ள 5 இலட்சம் மக்களுக்காக ஜெபியுங்கள்.

13. **டிசம்பர் 9**-உலக லஞ்சஒழிப்பு தினம் (International Anti-Corruption Day)-லஞ்சம், ஊழல், சட்டம் அவமதித்தல் போன்ற காரியங்களை மறைய ஜெபியுங்கள்.

14. **டிசம்பர் 10**-மனித உரிமைகள் தினம் (Human Rights Day)-மனிதனுக்குத் தேவையான அடிப்படை உரிமைகள் மறுக்கப்படாமல் வழங்கப்பட ஜெபியுங்கள்.கட்டாய கல்வி உரிமையை அனைவரும் பயன்படுத்த ஜெபியுங்கள்.

15. **டிசம்பர் 14**-இந்திய கடற்படை தினம் (Indian Navy Day) - இன்று கொண்டாடப்படும் கடற்படை தினத்தில், நம் கடல் பகுதிகளைப் பாதுகாக்கும் வீரர்களுக்காக ஜெபியுங்கள்.

16. **டிசம்பர் 25** - கிறிஸ்துமஸ் தினம் (Christmas Day) - கிறிஸ்து பிறப்பின் நற்செய்தி நம் பட்டணத்திலும், தேசத்திலும் உள்ள அனைவருக்கும் அறிவிக்கப்பட ஜெபியுங்கள்.

நன்றி : கேரீத்

ASSEMBLIES OF GOD

தமிழ் பிரதேச சிறுவர் ஊழியம் (AGCM)

மத்தும்

AGCM

BIBLE CHAMPIONS 2026

நவம்பர் 15 மாலை 3:00 மணி

பரிசுகள்

1 

2 

3 

	GROUP A	GROUP B	GROUP C	GROUP D	GROUP E
வயது பிரிவு	6 வயது வரை	7-9 வயது வரை	10-13 வயது வரை	14-17 வயது வரை	18 வயதுக்கு மேல் (ஞாயிறு பள்ளி ஆசிரியர்கள்)
வேதபகுதி	ஆ தியாகமம்	ஆ தியாகமம்	ஆ தியாகமம்	ஆ தியாகமம்	ஆ தியாகமம்
மதிப்பெண்	1 முதல்-12ம் அதிகாரம் வரை 30	1 முதல்-22 ம் அதிகாரம் வரை 60	புத்தகம் முழுவதும் 100	புத்தகம் முழுவதும் 100	புத்தகம் முழுவதும் 100
கேள்விமுறை	படம் வரைதல் (10) வர்ணம் தீட்டுதல் (10) சரியான விடை (10)	தேர்ந்தெடுத்து எழுதுக (50) குறுகிய விடையளி (2×5=10)	தேர்ந்தெடுத்து எழுதுக (90) குறுகிய விடையளி (2×5=10)	தேர்ந்தெடுத்து எழுதுக (90) குறுகிய விடையளி (2×5=10)	தேர்ந்தெடுத்து எழுதுக (100)

பதிவு கட்டணம் அனைத்து பிரிவினருக்கும் ₹40/- மட்டுமே

பதிவு செய்ய வேண்டிய கடைசி நாள் 02.11.2026

ஆங்கிலம் படிப்பவர்கள் NKJV மொழிபெயர்ப்பை பயன்படுத்தவும்.
பிரதேச அளவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் 3 பரிசுகள்
முதல் பரிசு கீபோர்ட், இரண்டாம் பரிசு கிட்டார்,
மூன்றாம் பரிசு மெலோடிகா
மண்டல அளவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் பரிசு
அதிகமான பிள்ளைகள் பதிவு செய்யும் சபை,
சபை போதகருக்கு பரிசு அதிகமான பிள்ளைகள் பதிவு செய்யும்
மண்டல போதகர்கள் மற்றும் AGCM பொறுப்பாளருக்கு பரிசு.

For more information 9751974000

FOR MORE DETAILS

Rev. S.P. Rajaselvam +91 97867 65100 | Rev. P. Ebenezer +91 98846 99087
Rev. A. Issac Prabhu +91 99944 21424 | Rev. D. Vibin Dos +91 9677 147485
Pr. D. Ebenezer Paul +91 87608 16087







ASSEMBLIES OF GOD CHILDREN'S MINISTRY
30, Navalar Nagar 1st Street, Madurai-625 016.

HOW TO PREPARE FOR THE COMING OF JESUS?

இயேசுவின் வருகைக்கு ஆயத்தப்படுவது எப்படி?

மத்தேயு 24:44; 25:10. வெளி. 19:7

1. **PURIFY** YOURSELF.
   பரிசுத்தராயிருங்கள்
   யூதா 23; 1 யோவான் 3:2,3; 2 பேதுரு 3:14; வெளி. 22:11

2. **PRAY** WITH WATCHFULNESS
   ஜெபம்பண்ண ஜாக்கிரதையாயிருங்கள்
   யூதா 20; 1 பேதுரு 4:7; லூக்கா 21:36

3. **PRACTISE** CHRISTIAN LOVE
   கிறிஸ்துவின் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்
   யூதா 21; மத்தேயு 25:32-45; 24:12; 2 தீமோ.3:3

4. **PROCLAIM** THE GOSPEL
   சுவிசேஷத்தை அறிவியுங்கள்
   யூதா 22; 2 தீமோ.4:1,2; 2 பேதுரு 3:9; மத்.24:14

5. **PERSEVERE** IN FAITH.
   விசுவாசத்தில் உறுதியாயிருங்கள்
   லூக்கா 18:8; யூதா 20; 1 பேதுரு 5:9; 1 தீமோ.4:1



போட்டி எண் : 19 (சரியான விடைகள்)

1. சாந்தகுணமுள்ளவர்கள் (சங்கீதம் 22:26).
2. நீதிமானைப் பகைக்கிறவர்கள் (சங்கீதம் 34:21).
3. துன்மார்க்கன்(சங்கீதம் 10:4).
4. உண்மையுள்ளவர்கள் (சங்கீதம் 12:1).
5. துன்மார்க்கன் (சங்கீதம் 37:21).
6. சிறுமைப்பட்டவனுக்குக் (சங்கீதம் 9:9).
7. துன்மார்க்கனுக்கு (சங்கீதம் 32:10).
8. அந்நியதேவனை நாடிப் பின்பற்றுகிறவர்களுக்கு (சங்கீதம் 16:4).
9. கர்த்தருடைய வேதம் (சங்கீதம் 19;7).
10. ஆத்தும மீட்பு (சங்கீதம் 49:9).
11. தீமை (சங்கீதம் 34:21).
12. கர்த்தருடைய வசனம் (சங்கீதம் 18:30).
13. எந்த மனுஷனும் மாயையே (சங்கீதம் 39:5).
14. உமது மதகுகளின் இரைச்சலால் ஆழத்தை ஆழம் (சங்கீதம் 42:7).
15. உயர இருக்கும் வானங்களையும் பூமியையும் (50:4).
16. பாவியின் மேல் (சங்கீதம் 7:11).
17. நீதியை, அக்கிரமத்தை (சங்கீதம் 45:7).

18. மரணபரியந்தம் (சங்கீதம் 48:14).

19. நீதிமானைச் (சங்கீதம் 11:5).

20. இரத்தப்பிரியனையும், சூதுள்ள மனுஷனையும் (சங்கீதம் 5:6).

21. அக்கினி ஜ்வாலைகளைப் (சங்கீதம் 29:7).

22. அவருக்குப் பயந்தவர்களிடத்தில் (சங்கீதம் 25:14).

23. பயத்துடனே கர்த்தரை (சங்கீதம் 2:11).

24. செம்மையானவர்களுக்குத் (சங்கீதம் 33:1).

25. 6 முறை (சங்.1:2; 32:1,2; 34:8; 40:4; 41:1).

போட்டி எண் : 19 (சரியான விடை எழுதியவர்கள்)

செங்கோட்டை: குளோரி; விஜி; சித்ரா பிளஸ்சி; ராதாமணி; கிரிஜா; பிரின்ஸி ஜெனிபர்; கலாராஜம்; ராணி; இவாஞ்சலின்; ஜீவா; தனபாக்கியம்; மரகதம்; முத்துகோபால்; K.மகேஷ்வரி; கனகவல்லி; கோகிலா; பிரபா; பெனிட்டாராணி; ஜெயசிலின்; மாரிச்செல்வி @ மரியாள்; பியூலா; எஸ்தர்; E.கலா; M.சுமதி; பிரேமலதா; பிரியா; டோரா; மஞ்சு; S.முத்துலெட்சுமி; J.சுமதி; புஷ்பவல்லி; மாது; கிறிஸ்டி; மயில்; | **எடப்பாடி**: பவிஷ்கா; அஞ்சலி அரசு; கிருபாகரன்; மல்லிகா ஜீவா; பிளஸ்சி ஆராதனா; மூர்த்தி; மேத்யு; மாலதி சுரேஷ்; கவின்; | **ஸ்ரீ வில்லிபுத்தூர்**: காபிரியேல்; J.வசந்தா; நெல்சன் செல்வராஜ்; வெங்கடவள்ளி; மாதவி; கிருபா; ஜமுனா ராணி; | **ஆலங்குளம் (வி)**: ஸ்டெல்லா மேரி; மரியாள்; K.ஸ்டெல்லா; உமா ரோஸ்லின்; பிளாரன்ஸ்; ரெஜினா சாரு; |**சேத்துப்பட்டு**: அமல்மேரி; புனித மேரி; ரெக்ஸி ஈஸ்வரன்; லூர்து மேரி; மரகதம்; சுகந்தி பெனடிக்; மாதரசி; | **மடத்துக்குளம்** : K.சரண்யா; கிரேஸ் மேரி; ரூத்; A.ஸ்டெல்லா மேரி; மல்லிகா; பரிமளா; |**தேனி** : தனம்; திரவியச்செல்வி; பூமணி ஜான்சி; கார்த்திகேயாயினி; செண்பகபுஷ்பா; |**திருச்சி** : யோபு சாமுவேல்; ஜாஸ்மின் உஷா ராணி; மெர்ஸி சந்திரகலா; ஜூலா கிரேஸ்; மரியாள்; |**ஆறுமுகநேரி**: வெண்ணிலா எஸ்தர்; ஜூலியட்; சரோஜா; பிரியா; சிவகாமி எஸ்தர்; | **இராதாபுரம்**: ஜெயா; செல்வப்பிரியா; மல்லிகா; நித்யா; | **இளையரனேந்தல்**: மெர்ஸி; ஜோன் ஆஃப் ஆர்க்; ஜெஸி; |**மதுராந்தகம்**: K.சங்கீதா; மலர்க்கொடி; ரேணுகா; |**நத்தக்காடையூர்**: பெட்சிலிகா; செல்வி; பென்சி; |**சுரண்டை**: குளோரி ஞானம்; சரோஜா பாலன்; ஜானா; | **அச்சரப்பாக்கம்** : தமிழ்ச்செல்வி; திரேசா;| **மேல அனுப்பானடி** : ஜெயா; அனிதா; |**ஆண்டிப்பட்டி**: தேவபாக்கியம்; புளோரியா; |**கடையநல்லூர்**: ஆஷாதேவி; விக்டோரியா; ஸ்டெல்லா; வசந்தி சேகர்; |**அக்காள்மடம்**: யாகுல மேரி; சேம்ராஜ்; |**புளியங்குடி** : ஜெபஞானம்: ஜெயமணி; | **நாகமலை** : K.ஆனந்தி; விஜிலா; |**ஓசூர்**: ஜெமிந்தா; |**அந்தமான் நிக்கோபார்**: ஜெயந்தி; |**கோத்தகிரி**: எஸ்தர் ஜெபகுமார்; |**கௌரிவாக்கம்**: சின்னராஜ்; |**ஆம்பூர்** : ரூபி மனோகரன்; |**கரூர்** :நிவேதா; ஜெயந்தி தாமஸ்; |**கடலையூர்**: ஆபிரகாம் எஸ்தர்; |**கொட்டிவாக்கம்** : அமுதவல்லி; |**சென்னை** : மெர்லின் ஹெலன் பிரித்தியா; |**திண்டிவனம்**: சாராள் அறிவுச்செல்வி; |**நாகபட்டினம்**:வின்சென்ட்ராஜ்; |**மேடவாக்கம்**: பியூலா ஜாய்ஸ் சுகந்தி; |**மேலகரம்**: அனிதா சசிகுமார்;| **சிந்தாமணி**: மெர்குலிஸ் மேரி ;| **இடைகால்**: செல்வி ஜான்சன்; | **திருநின்றவூர்**: எழிலரசி; |**வேலூர்**: சுமித்ரா; |**மூக்குப்பேறி**: செல்லத்தாய் ராணி; |**அம்பாசமுத்திரம்**: ஹரிலீலா; | **அகஸ்தியர்பட்டி**: நிர்மலா; | **பழனி**: எஸ்தர்; |**மதுரை** : கீர்த்தனா ரீபன்; |**பாளையங்கோட்டை**: சாந்தாகுமாரி; |**வெள்ளக்கால்**: கலா; |**நாசரேத்**: மெர்ஸி;| **அயனாவரம்**: அமலசெல்வி; |**கல்லிடைக்குறிச்சி** : ஜெப்ரோனிக்கா; |**கல்லல்**: அபிஷாக்; |**சொக்கம்புதூர்**: நிர்மலா; |**பெருங்குளம்**: பியூலா ஜோபாய்; | **வீரபாண்டிய பட்டனம்**: சுகிர்தா டைட்டஸ்; |**ஆரல்வாய்மொழி**: ஹெப்சி

பரிபூரண ஜீவன் போட்டி எண்-20
சங்கீதம் 51-100 (இருப்பிடத்துடன் விடையை எழுதவும்)

1. எனக்கோ ---------- நலம்.
2. தேவனாகிய கர்த்தர் ----------, ----------
3. ---------- தண்ணீர்களிடத்தில் உன்னைச் ---------- அறிந்தேன்.
4. உம்மை நிந்திக்கிறவர்களுடைய ---------- என்மேல் விழுந்தது.
5. அவன் ---------- யுத்தம்.
6. தேவபர்வதம் ---------- பர்வதம் போலிருக்கிறது.
7. ---------- தேவனென்று அறியுங்கள்.
8. ஒரு ---------- எங்கள் வருஷங்களைக் கழித்துப்போட்டோம்.
9. ---------- விஷத்திற்கு ஒப்பான ---------- அவர்களில் இருக்கிறது.
10. கர்த்தர் ---------- பெரியவர்.
11. ---------- உம்முடைய ---------- போதிக்கிற மனுஷன் ---------- .
12. என் ---------- ஆண்டவரைத் தேடினேன்.
13. நிலத்துக்கு எருவாய்ப்போன ---------- , ---------- ,
14. கடலை உலர்ந்த ---------- மாற்றினார்.
15. கிழக்கிலும், மேற்கிலும், வனாந்தர திசையிலுமிருந்து ---------- வராது.
16. முதிர்வயதிலும் கனிதந்து ---------- பசுமையுமாயிருப்பார்கள்.
17. மனுஷனுடைய ---------- உமது மகிமையை விளங்கப்பண்ணும்.
18. நான் ---------- நாளில் உம்மை நோக்கிக் கூப்பிடுவேன்.
19. கர்த்தரின் ---------- பர்வதங்கள் ---------- உருகிற்று.
20. ---------- பிரியப்படுகிற ஜனங்களை சிதறடிப்பார்.
21. என் உதடுகள் விளம்பினதை ---------- இருப்பேன்.
22. அநேகருக்கு நான் ஒரு ---------- போலானேன்.
23. ---------- கர்த்தருக்குள் மகிழ்ந்து அவரை நம்புவான்.
24. தேவனுக்கேற்கும் பலிகள் ----------
25. ---------- பேசுகிறவர்களின் வாய் அடைக்கப்படும்.

குறிப்பு: விடையை புத்தகத்தில் எழுதி அனுப்பாமல் தனியாக பேப்பரில் எழுதி அனுப்பவும்

விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 5.12.2026



விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி

Mrs.சாந்திபால்

16/50 கொல்லம் மெயின் ரோடு, சீயோன் ஏ.ஜி. சர்ச்
SETC BUS டிப்போ அருகில், செங்கோட்டை - 627 809
தென்காசி (மாவட்டம்). செல் : 88077 18002

மத்திய வாலிபர்
உபவாச ஜெபம் 2026

CHENNAI | MADURAI | TRICHY | COIMBATORE | PALAYAMKOTTAI



SIAG Prayer Camp - MADURAI









Registered News Paper Regd. No. 8206 / 62





BOOK POST

If Undelivered please return to
PARIPOORANA JEEVAN
30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 4200664